121

121

அமிர்த வாசகம்

மூன்றாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF ...
18 JUL 1947
MADRAS

BY

L. A. PITHAVADIAN

TB
031(3)
N47
137061

விலை 7 அணு

121

அமிர்த வாசகம்

மூன்றாம் புத்தகம்

AMIRTHA VASAGAM

THIRD BOOK

OFFICE OF THE REGISTRAR OF ...
18 JUL 1947
MADRAS

BY

L. A. PITHAVADIAN, B.A., L.T.

National Froebel Union Higher Certificate, England
Cambridge Teachers' Diploma,
Formerly Lecturer in
St. Christopher's Training College, Madras

Revised according to the Elementary School Syllabus 1939

THE CHRISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA
(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
MADRAS BANGALORE MYSORE BEZWADA COLOMBO
1947

Ninth Edition, 1947

Approved by the Madras Text-Book Committee—Vide Fort St. George Gazette, dated 2nd June 1942, Part I, page 86 and Part II, page 105.

TB
031.3
N47

137061
600 008.

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS (P.I.C. NO. Q.H. MS. 5) FOR THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA (P.I.C. NO. MS. 70)—
19-6-1947. B 4632.

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	தேன் சிட்டு அரசு ஆன கதை	1
2.	யானை, பாகம் 1	4
	பாகம் 2	5
	பாகம் 3	7
3.	ஜமீன்தாரும் மாட்டுக்காரப்பையனும்	10
4.	மரங்கள்	12
5.	எந்த மரம்	15
6.	குளம்	16
7.	பழங்கள்	18
8.	சிக்கனம்	20
9.	நாணயங்கள்	22
10.	வண்டிகள், பாகம் 1	25
	பாகம் 2	28
11.	ரெயில்வண்டிப் பிரயாணம், பாகம் 1	30
	பாகம் 2	32
12.	சிங்காரவேல் கதை, பாகம் 1	34
	பாகம் 2	35
13.	வௌவால்	39
14.	நாய், பாகம் 1	41
	பாகம் 2	42
15.	ஆடை	45
16.	குமணர்	50
17.	வார்த்தை அமைப்பு விளையாட்டு	53
18.	தென்னைமரம்	54
19.	குதிரை, பாகம் 1	58
	பாகம் 2	59

பாடம்		பக்கம்
20.	பியூசெபாலஸ் என்ற குதிரை	62
21.	தேரை	66
22.	உப்பு	68
23.	கடவுளின் அன்பு	71
24.	பொருந்தாத வார்த்தைகள்	75
25.	போலீஸ்காரன், பாகம் 1	76
	பாகம் 2	78
26.	நந்தவனம்	80
27.	தபால், பாகம் 1	82
	பாகம் 2	84
28.	கடிதம் எழுதுதல்	86
29.	விலாசம் எழுதுதல்	88
30.	உண்மையுள்ள இடைப்பையன்	89
31.	தொழிலாளர், பாகம் 1	93
	பாகம் 2	94
	பாகம் 3	95
	ஆத்திசூடி...	97
	கொன்றைவேந்தன்	98
	அரும்பதவுரை	99

அமிர்த வாசகம்

மூன்றும் புத்தகம்

1. தேன் சிட்டு அரசு ஆன கதை

ராஜபதவி	தந்திரத்தினுல்
தகுதியுள்ளது	தன்மைகள்
சொற்சாதுரியம்	ஞானமுடையது
ராஜாங்கம்	பெருமையாய்
விஷயத்தில்	அதிசீக்கிரத்தில்

ஒருநாள் பட்சி ஜாதிகளெல்லாம் தங்களில் ஒன்றை ராஜாவாகத் தெரிந்துகொள்ளும்படி கூடி வந்தன. "ராஜ பதவிக்கு என்ன தன்மைகள் இருக்கவேண்டும்" என்று சிட்டுக்குருவி கேட்டது.

மயில் தன்னைப்போல அழகான பட்சி கிடையாது என்று எண்ணி, "எல்லாப் பட்சிகளிலும் மிகுந்த அழகு வாய்ந்த பட்சியே பட்சிகளுக்கு ராஜாவாகத் தகுதியுள்ளதென்று சொல்லலாம்" என்று சொல்லிற்று.

ஆந்தை தன்னைப்போல ஞானமுடையது பட்சி ஜாதியில் கிடையாது என்று நினைத்து, "சீச்சீ! அழகு எதற்கு? எல்லாப் பட்சிகளிலும் ஞானமுடைய பட்சியே ராஜ பதவியை அடையத் தகுதியுள்ளது" என்று சொல்லிற்று.



"ஞானம் இருந்து என்ன பிரயோஜனம்? அழகு இருந்து என்ன பிரயோஜனம்? சொற் சாதுரியமில்லாமல் ராஜாங்க வேலே நடக்குமா? சொற்சாதுரியமுடையதே ராஜாவாகவேண்டும்" என்று கிளி தெளிவாய்ச் சொல்லிற்று.

கழுகு பெருமையாய் எழுந்து நின்று, "பட்சி களே, கேளுங்கள். மற்றப் பிராணிகளுக்கும் நமக்குமுள்ள வித்தியாசம் பறக்கும் சக்தியே. ஆதலின் பறக்கும் விஷயத்தில் எது சிறந்ததோ அதுவே அரசாகட்டும்" என்று சொல்லிற்று.

இப்படிச் சொல்லிக் கழுகு தனது சிறகுகளே விரித்துப் பறந்துபோயிற்று. மற்றப் பட்சிகளும் கூடப் பறந்தன. அதிசீக்கிரத்தில் கழுகு கண் ணுக்கு எட்டாத தூரம் பறந்துவிட்டது. மற்றப் பட்சிகள் ஒன்றும் கூட வராமையால், "நானே ராஜ பதவியை அடைந்துவிட்டேன்" என்று சொல்லிக் கழுகு கீழே வர ஆரம்பித்தது.

உடனே கழுகின் முதுகின்மேல் அதுவரைக்கும் சுகமாய் உட்கார்ந்திருந்த தேன் சிட்டு இன்னும் உயரப் பறந்து, தன் தந்திரத்தினுல் ராஜாவாயிற்று.

பதவி = நிலைமை
சொற்சாதுரியம் = பேச்சுத் திறமை
ராஜாங்க = அரசாட்சிக்குரிய

கேள்விகள்

1. பட்சிகளில் தன்னைப்போல அழகுடையது கிடையாது என்று நினைத்தது எந்தப் பட்சி?

2. தன்னைப்போல ஞானமுடைய பட்சி கிடையாது என்று நினைத்தது எந்தப் பட்சி?

3. சொற்சாதுரியமுள்ள பட்சி எது?

4. சிட்டுக்குருவி எப்படி ராஜாவாயிற்று?

இலக்கணம்

இந்தப் பாடத்தில் சொல்லப்பட்டிருக்கும் பறவைகள் எவை?

2. யானை

பாகம் 1.

மேன்மை	உறுப்பினால்
ஜலம்	மாலையில்
விக்கிரகத்தை	ஊர்வலம்
அணிந்திருந்தது	ஏறக்குறைய
சாதாரணமாய்	ஆள்பார்ரம்
நாசமாக்கும்	சஞ்சாரம்
சரீரத்தின்	கடகங்கள்
நகைகள்	தந்தங்கள்
வாகனம்	அஞ்சாது
தைரியம்	யுத்தங்கள்
போர்வீரர்	அதோகதி

ராதா.—ராமு, ஓடிவா. இதோ யானை வருகிறது!



ராமு.—அக்கா, எவ்வளவு பெரிய யானை? இரண்டு ஆள் உயரம் இருக்குமா?

ராதா.—பெரிய யானை, ராமு. சீக்கிரம் ஓடி வா.

ராமு.—அக்கா, இது எவ்வளவு பெரிய யானை! நம்முடைய வீட்டளவு உயரம் இருக்கிறது பார். அக்கா, வா நாம் யானைகூடப் போவோம். அது என்ன அழகாய் நடக்கிறது! அது தன் பெரிய கால்களைத் தூக்கி வைக்கும் மேன்மையைப் பார். இப்போது அது எங்கே போகிறது?

ராதா.—தம்பி, அது ஆற்றுக்குக் குளிக்கப் போகிறது.

ராமுவும் ராதாவும் மற்றும் பல குழந்தைகளும் யானையின் பின்னே ஓடினார்கள். யானை கடைகளில் தன் நீண்ட துப்பிக்கையை நீட்டினது. ஒரு கடைக்காரன் கால் அணாக் கொடுத்தான். அதைத் தும்பிக்கையில் உள்ள விரல்போன்ற உறுப்பினால் எடுத்துத் தன் முதுகின்மேலிருந்த பாகனிடம் கொடுத்தது. தோசைக்காரி ஒருத்தி தோசை கொடுத்தாள். அதைச் சுருட்டித் தன் வாயில் வைத்துக்கொண்டது.

யானை ஆற்றில் இறங்கிக் குளித்து நீரில் விளையாடியது. தும்பிக்கையில் ஜலம் நிரப்பி, தன் தலையின்மேல் இறைத்துக்கொண்டது. மாலையில் அது ரங்கநாத விக்கிரகத்தைத் தன் முதுகின் மேல் ஏற்றி ஊர்வலம் வந்தது. அப்போது அது என்ன அழகான உடையும் நகைகளும் அணிந்திருந்தது!

பாகம் 2.

ஒரு யானை ஏறக்குறைய ஒன்பது அடி உயரமிருக்கும். பதினொரு அடி உயரமான யானைகளும்

உண்டு. சாதாரணமாய் யானை அறுபது ஆள் பாரம் இருக்கும். அது வாழைத்தண்டு, புல், இலை முதலியவற்றைத் தின்னும். ஒரு நாளில் அது எவ்வளவு இலையும் புல்லும் தின்னுமோ! தப்பித் தவறி யானை வாழைத்தோட்டங்கள் அல்லது பயிர் நிலங்களில் புகுந்தால் பெரு நஷ்டம் உண்டாக்கும். வயிறு நிறையத் தின்பதோடு அது தன் பெரிய கால்களால் பயிரை மிதித்தும் நாசமாக்கும்.

யானை மரம் அடர்ந்த பெரிய காடுகளிலும் மலைகளிலும் வசிக்கும். அது தனிமையாய்ச் சஞ்சாரம் செய்வதில்லை, மந்தைகளில் வசிக்கும். ஒரு மந்தையில் முப்பது நாற்பது யானைகள் இருக்கும். ஒவ்வொரு மந்தையும் ஒவ்வொரு

குடும்பமாகும். எந்த யானையாவது குற்றம் செய்தால், அதை மற்ற யானைகள் மந்தையிலிருந்து துரத்திவிடும். ஒருதரம் மனிதர் கையில் அகப்பட்ட யானையையும் மற்ற யானைகள் சேர்த்துக் கொள்ளா.

யானை அறிவுள்ள மிருகம். சொன்னபடி கேட்டு நடக்கும். அதன் சரீரத்தின் அளவிற்குத் தக்க தேக பலமும் உடையது. ஆகையால் நமது தேசத்தில் ஜனங்கள் அதைப் பிடித்துப் பழக்கி வேலை செய்விப்பார்கள். ஆபிரிக்கா கண்டத்திலோ அப்படி அல்ல. யானைக்கு இரண்டு வெள்ளைத் தந்தங்கள் உண்டல்லவா? அவற்றால் சீப்புகளும், கைக்குக் காப்புகளும், மணி மாலைகளும், இன்னும் பல நகைகளும் செய்வதற்காக யானைகளை வேட்டையாடிக் கொல்லுவார்கள். அந்தத் தந்தங்களை எடுத்து உயர்ந்த விலைக்கு விற்பார்கள்.

பாகம் 3.

நமது தேசத்திலே பூர்வகால முதல் இந்நாள் வரைக்கும் யானைகளைப் பற்பல வேலைகளுக்காக உபயோகித்துவந்திருக்கிறார்கள். வெகு காலமாக அரசர்களுக்கு வாகனம் யானையே. தற்காலத்தில் மோட்டார் வண்டிகள் இருப்பதால் யானையை வாகனமாக உபயோகிப்பதில்லை. ஆனால் புலி முதலிய துஷ்ட மிருகங்களை வேட்டையாடப் போகும்போது யானையின்மேல் ஏறிக்கொண்டு போவார்கள். யானை புலிக்கு அஞ்சாது. புலியை வேட்டையாடப் போகிறவனுக்கு யானையின்மேல் ஏறியிருப்பது தைரியத்தைக் கொடுக்கும். முற்காலத்தில் போர்வீரர் யானைகள்மேலேறி யுத்தங்களுக்குச் செல்வார்கள். காலாட்படை யானைப் படைக்கு எதிர்ப்பட்டால் அதன் கதி அதோகதி தான். யானைகள் அதை மிதித்து நசுக்கிவிடும்.

மலையாள நாட்டின் மலைகளிலும் இலங்கையிலும், வடஇந்தியா, பர்மா முதலிய இடங்



களின் மலைகளிலும் யானைகள் உண்டு. அங்கே வீடு கட்டுவதற்கும் சாமான் செய்வதற்கும் தகுந்த மரங்களும் உண்டு. அந்த மரங்களை வெட்டி மற்ற இடங்களுக்கு அனுப்புவதற்கு யானையைப் போல நல்ல வேலையாள் கிடையாது. மரங்களிலிருந்து வெட்டின பெருங்கட்டைகளை அது தூக்கி அடுக்கும். மரம் அறுக்கும் ஆலைகளில் மரத்தைத் தூக்கிக் கொடுக்கும். அறுத்தபின் பலகைகளை ஒழுங்காய் அடுக்கும். வண்டிப் பாதை இல்லாத மலைச்சரிவுகளில் கட்டைகளைத் தானே சுமந்து குறித்த இடத்தில் கொண்டுவந்து சேர்க்கும். வேலை முடிந்தபின் வெகு சந்தோஷமாய் இருக்கும்.

யானை தன் பாகனுக்குக் கீழ்ப்படிந்து அவனை நேசிக்கும். அதற்குக் கோபம் மூட்டினல் பாகனைக்கூடத் தூக்கி எறிந்து மிதித்துக் கொன்று விடும். ஒருநாள் ஒரு யானை கோபமாய் ஓடித் திரிகையில் அதன் பாகன் அதை வசப்படுத்தும்படி அதன் அருகே போனான். யானை அவனைக் கொன்றுவிட்டது. அவன் மனைவி யானையின் அருகே போய்த் தன் கணவனைக் காட்டி அழுதாள். யானை உடனே கோபம் அடங்கிக் கண்ணீர் விட்டது.

கேள்விகள்

1. தும்பிக்கையினுல் யானைக்கு என்ன பிரயோஜனம்?
2. கோவில் யானைக்கு வேலை என்ன?
3. யானையின் உயரம், பருமன், உணவு, வாசஸ்தலம், மந்தை முதலியவற்றைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
4. யானையினுல் மனிதருக்கு என்ன பிரயோஜனம்?
5. "யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று ஏன் சொல்லுகிருர்கள்?

இலக்கணம்

யானை ஒரு மிருகம். சில மிருகங்களின் பெயர்களைச் சொல்லு.

3. ஜமீன்தாரும் மாட்டுக்காரப் பையனும்

ஜமீன்தார்	குடியானவன்
கறவைப்பசு	தயாள குணம்
கால் ரூபாய்	திருப்திதான
கணக்கப்பிள்ளை	வஞ்சனைக்காக
கோபித்து	வஞ்சித்து

ஜமீன்தார் ஒருவர் ஒரு குடியானவனிடத்தில் ஒரு கறவைப்பசு வாங்கினார். அடுத்தநாள் குடியானவன் தன் மகன் சுந்தரத்தைக் கூப்பிட்டு அந்தக் கறவைப்பசுவை ஜமீன்தார் வீட்டுக்குக் கொண்டுபோய் விடும்படி சொன்னான்.

சுந்தரம் கறவைப்பசுவை ஜமீன்தார் வீட்டுக்குக் கொண்டுபோகும்போது ஜமீன்தார் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். பசு கலைந்து இங்குமங்கும் ஓடுவதை ஜமீன்தார் கவனித்தார். தோட்டம் பெரியது. வீடுவரைக்கும் பசுவைக் கொண்டுபோய்ச் சேர்க்கத் தனக்கு உதவி செய்யும்படி சுந்தரம் ஜமீன்தாரைக் கூப்பிட்டான். அவர் ஜமீன்தாரென்பது சுந்தரத்துக்குத் தெரியாது. ஆகையால் அவன், "ஜமீன்தார் எனக்கு என்ன கொடுத்தாலும் அதில் பாதி உனக்குத் தருகிறேன்" என்று சொன்னான். ஜமீன்தார் அவனைப் பார்த்து, "பசுவின் விலையை உன் தகப்பனிடம் கொடுத்தாயிற்றே. உனக்கும் பணம் கொடுப்பாரா?" என்று கேட்டார். அதற்குச் சுந்தரம், "ஆம், கொடுப்பார்கள். ஜமீன்தாரும் அவர்

வீட்டாரெல்லாரும் தயாள குணமுள்ளவர்கள்" என்ருன்.

வீட்டினருகே வந்தபோது, ஜமீன்தார் சுந்தரத்தை விட்டுவிட்டுப் பின் வழியாய் வீட்டுக்குள் நுழைந்து, சுந்தரத்துக்குப் பத்து ரூபாய் கொடுக்கும்படி கட்டளையிட்டார். பிறகு தோட்டத்தில் சுந்தரக்தைச் சந்தித்து, "ஜமீன்தார் ஏதாகிலும் கொடுத்தாரா?" என்று கேட்டார். அதற்கு அவன், "ஆம், எட்டு அணு கொடுத்தார். இதோ கால் ரூபாயை உனக்குக் கொடுக்கிறேன்" என்று சொல்லி, நாலு அணுவை ஜமீன்தாருக்குக் கொடுத்தான். ஜமீன்தார் அதை வாங்கிக் கொண்டு, "அரை ரூபாய்தாஞு கொடுத்தார்? அது உனக்குத் திருப்திதாஞ?" என்ருர். சுந்தரம், "ஆம், அரை ரூபாய்தான். அது எனக்குப் போதும்" என்ருன். ஜமீன்தார், "என்னேடு வா. உனக்கு இன்னும் கொஞ்சம் வாங்கிக்கொடுக்கிறேன்" என்றுசொல்லிச் சுந்தரத்தை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போஞர்.

உள்ளே போன உடனே, ஜமீன்தார் தம் வேலைக்காரரை யெல்லாம் வரச்சொல்லி, "இவர்களில் யார் உனக்கு அரை ரூபாய் கொடுத்தவர்?" என்று கேட்டார். சுந்தரம் கணக்கப்பிள்ளையைக் காட்டிஞன். ஜமீன்தார் கணக்கப்பிள்ளையை அவனுடைய வஞ்சனைக்காக கோபித்துக் கொண்டார். அவன் வஞ்சித்து வைத்திருந்த ஒன்பதரை ரூபாயையும் வாங்கிச் சுந்தரத்துக்குக் கொடுத்து, அவன் உண்மை பேசினதற்காக அவனை மெச்சிக்கொண்டார். சுந்தரம் அவருடைய தயாளத்தை ஒருபோதும் மறக்கவேயில்லை.

கேள்விகள்

1. ஜமீன்தார் சுந்தரத்துக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்?
2. கணக்கப்பிள்ளை செய்த வஞ்சகம் என்ன?
3. ஜமீன்தார் சுந்தரத்தை ஏன் மெச்சிக்கொண்டார்?

இலக்கணம்

உன்னிடமுள்ள சில பொருள்களின் பெயர்களை எழுது.

4. மரங்கள்

வேப்பமரம்	புளியமரம்
தூங்குமூஞ்சிமரம்	கோய்யா
கிச்சிலி	சீத்தா
இலந்தம்பழம்	விளாம்பழம்
நெல்லிக்கனி	அத்திக்கனி
கனிமரங்கள்	மரச்சாமான்
படகுகள்	கப்பல்
யோசித்துப்பார்	தோப்புகள்

மரங்கள் செடிகளைவிட உயரமாயிருக்கும். அவை குளிர்ச்சியான நிழல் தரும். பெரிய சாலைக

ளில் மரங்கள் இருக்கிறதைக்கவனித்திருக்கிறாயா? ஆல்மரம், வேப்பமரம், புளியமரம், தூங்குமூஞ்சி

மரம், பூவரசுமரம் முதலியவை இலையடர்ந்தவைகள். அவை நல்ல நிழல் கொடுக்கும். அவைகளைச் சாலைகளின் ஓரங்களில் வளர்க்கிறார்கள்.

மரங்களில் பலவகை உண்டு. சில மரங்கள் இனியகனியைத் தரும். அவைகளில் மா, பலா, கொய்யா,கிச்சிலி, சீத்தா என்பன சிறந்தவை. புளியம்பழம், நாவல் பழம், இலந்தம்பழம், விளாம்பழம், எலுமிச்சம்பழம், நெல்லிக்கனி, அத்திக்கனி முதலிய மற்றக் கனிமரங்களும் உண்டு. கனிமரங்களே சிறு பிள்ளைகளுக்கு விருப்பமான மரங்கள்.



சில மரங்கள் வீடு கட்டுவதற்கும், மரச்சாமான் செய்வதற்கும் உபயோகப்படுகின்றன. கதவு, ஜன்னல், தூண், உத்தரம் முதலியவை செய்வதற்கும், பெட்டி, கட்டில், மேசை, நாற்காலி, அலமாரி முதலிய சாமான்கள் செய்வதற்கும் மா, தேக்கு, பலா முதலிய மரங்கள் உபயோகமாகும். இவை மாத்திரமல்ல, பற்பல விதமான வண்டிகளும், படகுகளும், கப்பல்களின் சில பாகங்களும் மரத்தால் செய்யப்படுகின்றன.



இன்னும் சில மரங்கள் அடுப்பு எரிக்க உதவுகின்றன. சவுக்குமரமும், வேலமரமும் நன்ருய் எரியும். நாமெல்லாரும் பெரும்பாலும் சமைத்த பொருள்களையே உண்கிறேம். ஒரு நாளிலே சமையல் வேலைக்காக மாத்திரம் எவ்வளவு மரம் எரிக்கிறேம் என்று யோசித்துப்பார். காட்டு மரங்களை வெட்டி, அடுப்பு எரித்துக்கொண்டேயிருந்தால், சில வருஷங்களுக்குள்ளாக எரிக்க மரம் இராது. ஆகையால் ஜனங்கள் விறகுக்காகச் சவுக்குத் தோப்புகள் வளர்க்கிருர்கள்.

கேள்விகள்

1. மரங்களினுல் உண்டாகும் பிரயோஜனங்கள் எவை?

2. கனிதரும் ஆறு மரங்களின் பெயர்களைச் சொல்லு.

3. சாமான் செய்ய உதவுகின்ற மரங்கள் எவை?

4. அடுப்பு எரிக்க மரங்கள் இல்லாமற் போகாதபடி என்ன செய்கிருர்கள்?

இலக்கணம்

1. உன் வகுப்பிலுள்ள சில பிள்ளைகளின் பெயர்களை எழுது.

2. கீழே உள்ளவற்றுள் பெயர்களைக் காட்டும் சொற்கள் எவை?

(i) மரம் அடுப்பு எரிக்க உதவும்.

(ii) ஜனங்கள் விறகுக்காக சவுக்குத்தோப்பு வளர்க்கிருர்கள்.

(iii) கனிமரங்களே பிள்ளைகளுக்கு விருப்பமான மரங்கள்.

5. எந்த மரம்

அரசமரம்	தூங்குமூஞ்சிமரம்	ஆலமரம்
தென்னைமரம்	வேப்பமரம்	விளாமரம்
பலாமரம்	வாழைமரம்	புளியமரம்
சீத்தாமரம்	பூவரசுமரம்	இலவமரம்

1. விரித்த குடை போன்ற மரம்————————
2. பந்துகள் தொங்கும் மரம்————————
3. பஞ்சு கொடுக்கும் மரம்————————
4. முடிவிரித்துத் தொங்கவிட்டிருக்கும் மரம்————
5. வைசூரி வந்தவர்களுக்கு உதவும் மரம்————
6. மரக்கட்டையில்லாத மரம்————————
7. வேரில் பழம் கொடுக்கும் மரம்————————
8. குழம்புக்கும் ரசத்துக்கும் உதவும் மரம்————
9. ராமர் மனைவியின் பேர் கொண்ட மரம்————
10. குடிக்கத் தண்ணீர் கொடுக்கும் மரம்————

இலக்கணம்

1. சில மரங்களின் பெயர்களை எழுது.

2. பிள்ளை பிறந்த உடனே அதற்கு என் பேர் வைக்கிருர்கள்?

6. குளம்

குளக்கரை	நீந்திப்போய்
தமையன்	சம்பாஷிக்கலானார்கள்
நீர்ப்பாம்பு	நேரிடாது
வெளுக்கிற	குளிப்பாட்டுகிறான்
பொறுக்கி	பயிர்கள்
புழுக்கள்	

ஒருநாள் மாலை நாலரை மணிக்குக் கமலாவும், அவள் தம்பி முத்தும், தங்கை லட்சுமியும், பெரிய அண்ணன் ரத்தினசாமியும் குளக்கரைக்கு உலாவப்போனார்கள். அவர்கள் வீடு சிறியது. அவர்கள் இருந்த வீதியில் வீடுகள் நெருக்கமாய்க் கட்டப்பட்டிருந்தன. ஆகையினாலே குளக்கரைக்கு உலாவப்போவது அவர்களுக்கு அதிக விருப்பம். குளம் அவர்கள் வீட்டிலிருந்து அரைமைல் தூரத்தில் இருந்தது.

முத்து குளக்கரைக்குப் போய்ச் சேர்ந்ததும் சட்டையைக் கழற்றிக்கொண்டு, "அண்ணா, நான் குளிக்கப்போகிறேன். அதோ பார், ராஜு, சந்திரன், தனபால் எல்லாரும் குளிக்கிறார்கள். அக்கா, என் சட்டையை வைத்துக்கொள்" என்று சொல்லிக்கொண்டு வேஷ்டியோடே தண்ணீரில் குதித்து மீன்போல் நீந்திப்போய்த் தன் தோழரோடே சேர்ந்துகொண்டான். கமலாவுக்கும் லட்சுமிக்கும் அவன்கூடப் போக ஆசை. ஆனால் அவர்களுக்கு நீந்தத் தெரியாது. ஆகையினால், நீந்துகிற பையன்களைப் பார்த்துக்கொண்டே கரையில் நின்றார்கள். அதன் பிறகு அவர்கள்

தங்கள் தமையனோடு பின்வருமாறு சம்பாஷிக்க லானார்கள்.

லட்சுமி.—அண்ணா, பார். எத்தனை மீன்கள் நம்மைப்பார்த்துக்கொண்டிருக்கின்றன? இவை என்ன மீன் என்று உனக்குத் தெரியுமா?

கமலா.—அதோ நீர்ப்பாம்பு வளைந்து வளைந்து போகிறது. அது தம்பியைக் கடிக்குமா, அண்ணா?

ரத்தினசாமி.—கடியாது, கமலா, கடித்தாலும் மோசம் ஒன்றும் நேரிடாது.

கமலா.—லட்சுமி, அதோ பார், நமக்கு துணி வெளுக்கிற ராமன். பகலெல்லாம் அவனும் அவன் தோழரும் ஓடையில் துணி தோய்க்கிறார்கள். இப்போது எல்லாவற்றையும் பொறுக்கிச் சேர்த்து மூட்டை கட்டி வீட்டுக்குக் கொண்டுபோகிறார்கள்.

அங்கே பார். ஓடையிலேயே மாரி மாடு குளிப்பாட்டுகிறான்.

லட்சுமி.—ஐயையோ! என் காலில் ஒரு தவளை குதித்தது! அண்ணா! எனக்கு இங்கே நிற்கப் பயமாயிருக்கிறது!

ரத்தினசாமி.—பயப்படாதே, தவளை உன்னைக் கடிக்கவே கடியாது. தவளையிருப்பது தண்ணீருக்கு நல்லது. அது புழுக்களைத் தின்று தண்ணீரைச் சுத்தம்செய்யும். வாருங்கள், இந்தக் குளக்கரை நெடுகப் போவோம். இங்கே பல ஜாதி மரங்களும், வாழை, கரும்புத் தோட்டங்களும், தென்னந்தோப்புக் களும் உண்டு. பயிர்களுக்குத் தண்ணீர் பாய்

வது பார். அடுத்த மாதம் கரும்பு வெட்டு வார்கள். தென்னந்தோப்பிலே இளநீர் குடிக்கலாம் வாருங்கள்.

கேள்விகள்

1. உலாவப்போன பிள்ளைகள் ஏன் அவ்வளவு பிரியத்துடன் உலாவப்போனார்கள்?

2. அந்தக் குளத்தினாலே ஜனங்களுக்கு என்ன பிரயோஜனம்?

3. குளத்திலே தவளையிருப்பது நல்லதா, கெட்டதா? ஏன்?

இலக்கணம்

1. வண்டியிழுக்கும் சில பிராணிகளின் பெயர்களை எழுது.

2. குளம்போல் நமக்குத் தண்ணீர் கொடுக்கும் சிலவற்றின் பெயர்களை எழுது.

7. பழங்கள்

தஞ்சாவூர்	சென்னைப்பட்டினம்
பழக்கடை	நார்ச்சதை
சுரசுரப்பான	நுங்கு
கோத்து	மணமற்ற
மினுமினுப்பான	பொன் நிறமான

தஞ்சாவூர்க் கிருஷ்ண ஐயர் சென்னைப்பட்டினத்துக்குப் போனார். பழக்கடையில் நல்ல நல்ல பழஙகள் விற்றன. வகைக்கு ஒன்று வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போனார். எல்லாருக்கும் ஆளுக்கு ஒரு பழம் கொடுத்தார். அவைகளின் பேர் உனக்குத் தெரியுமானால் சொல்லு.

1. மனைவிக்குக் கொடுத்த பழம்—பழ ஜாதியில் பெரியது. முள்ளால் நிறைந்த தோலுடையது, பச்சை நிறமானது. இனிப்பான சதை உள்ளது. விதை நிறைந்தது. நல்ல மணமுடையது.—ப——பழம்.

2. முதல் மகனுக்குக் கொடுத்த பழம்—சுர சுரப்பான தோலுடையது, மஞ்சள் நிறமானது, புளிப்புடன் கலந்த இனிப்புடையது, ரசம் நிறைந்த நார்ச் சதை உள்ளது. விதையில்லாதது, நல்ல மணமுள்ளது.—அ——பழம்.



3. இரண்டாம் மகனுக்குக் கொடுத்த பழம் ஒரு கொத்து—மழ மழப்பான தோலுடையது, கறுப்பு நிறமானது. புளிப்புடன் கலந்த இனிப்புடையது, ரசம் நிறைந்தது, நுங்குபோன்ற சதையுடையது, இரண்டு சிறிய விதையுள்ளது, மணமற்றது.—கறுப்புத் தி——பழம்.



4. மூன்றும் மகளுக்குக் கொடுத்த பழம்—கடினமான தோலுடையது, சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறமுடையது, இனிப்பான ரசமுடையது, விதை நிறைந்தது, மணமற்றது.—மா——பழம்.



5. கடைசி மகளுக்குக் கொடுத்த பழம்—மினுமினுப்பானதோலுடையது, பொன் நிறமானது, புளிப்புக் கலந்த இனிப்பு ரசமுடையது, ஏலக்காய் போன்ற விதைகளுடையது, நல்ல மணமுடையது.—ஆ—— பழம்.

இலக்கணம்

ஒரு பொருளின் பெயரைத் தெரிவிக்கும் சொல் பெயர்ச் சொல்.

தஞ்சாவூர், கிருஷ்ண ஐயர், சென்னைப்பட்டினம், பழம், கடை, மனைவி, தோல். இந்தச் சொற்களெல்லாம் பெயர்ச்சொற்கள் எனப்படும்.

8. சிக்கனம்

சிக்கனம்	வாலிபர்
ஜீவனம்	ஒவ்வொருவனும்
சம்பாதிப்பான்	ஒன்றேகால்
உடையவனுக்கு	புத்திசாலி
மீதியாகும்	ஊதாரி
பழகிக்கொண்டான்	கடனாளி

சென்னைப்பட்டினத்தில் சுப்பன், முத்துசாமி என்று இரண்டு வாலிபர் ரிக்ஷா வண்டி இழுத்து ஜீவனம் செய்தார்கள். ஒவ்வொருவனும் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாயாவது சம்பாதிப்பான். சில நாட்களில் அவனுக்கு ஒன்றேகால் ரூபாய் கிடைக்கும். அதில் வண்டியை உடையவனுக்கு அவன் நாலு அணாக் கொடுத்துவிடுவான்.

பெரும்பாலும் அவன் கையில் பன்னிரண்டு அணு மீதியாகும்.

சுப்பன் புத்திசாலி. "வண்டி நம்முடையதா யிருந்தால் சம்பாதிக்கிற பணமெல்லாம் நாமே வைத்துக்கொள்ளலாமே" என்று அவன் நினைத் தான். தீபாவளி யன்று அவன் ஒரு உண்டி வாங்கி ஒவ்வொரு நாளும் தவருமல் அதில் நாலு அணுப் போட்டுக்கொண்டுவந்தான். அதி



லிருந்து ஒரு நாளாவது அவன் பணம் எடுக்கவே யில்லை. மறு தீபாவளி வந்தபோது சுப்பன் உண்டியை உடைத்தான். அதில் எவ்வளவு பணம் இருந்தது, தெரியுமா? தொண்ணூற் ெறுரு ரூபாயும் நாலு அணுவும் இருந்தது. அதைக்கொண்டு அவன் ஒரு புது ரிக்ஷா வண்டி வாங்கினுன்.

முத்துசாமி ஊதாரி. ஓட்டலில் காப்பி சாப் பிடுவான். பீடி பிடிப்பான். கள்ளும் குடிக்கப் பழகிக்கொண்டான். ஆகையால் அவன் நித்திய கடனாளியாயிருந்தான்.

சுப்பன் இரண்டாம் வருஷமும் சிக்கனமாய்ப் பிழைத்து முடிவில் இரண்டு புது ரிக்ஷா வாங்கி வாடகைக்கு விட்டான். மூன்ருவது வருஷக்

கடைசியில் மூன்று புது ரிக்ஷா வாங்கி வாடகைக்கு விட்டான். பத்து வருஷங்களுக்குள்ளே சுப்பனுக்கு ஐம்பது ரிக்ஷாவண்டிகள் இருந்தன. இப்போது அவன் வண்டி இழுக்கிறதில்லை. வண்டிகளை வாடகைக்கு விடுவதும், கணக்குப் பார்ப்பதுமே அவனுக்கு வேலை. பெரிய வீடுகட்டிச் சுகமாய் அவன் வாழுகிறான்.

ஊதாரி = பெரும் செலவாளி.

கேள்விகள்

1. சுப்பனுக்கும் முத்துசாமிக்கும் சராசரி என்ன கூலி கிடைக்கும்?

2. சுப்பன் சீமானானதற்குக் காரணம் என்ன?

3. முத்துசாமி கடனாளியானதற்குக்காரணம்என்ன?

இலக்கணம்

முதல் பாராவிலுள்ள பெயர்ச்சொற்களைச் சொல்க.

9. நாணயங்கள்

வெள்ளி நாணயங்கள்
செம்பு நாணயங்கள்
நிக்கல் நாணயங்கள்

நாணயங்கள்	விலையுயர்ந்தது
விலை தாழ்ந்தது	வெள்ளி
செம்பு	அணா
தங்கத்தால்	நிக்கல் நாணயம்
கடுதாசிப் பணம்	சவரன்

படத்திலே எத்தனை நாணயங்கள் இருக்கின்றன? அவைகளில் விலை உயர்ந்தது எது? விலை தாழ்ந்தது எது?



முதல் வரிசையில் ரூபாயின் படம் காட்டு. அரை ரூபாயின் படம் காட்டு. கால் ரூபாயின் படம் காட்டு. இவைகளெல்லாம் வெள்ளி நாணயங்கள்.

இரண்டாவது வரிசையில் இரண்டு அணுவின் படம் காட்டு. ஒரு அணுவின் படம் காட்டு. அரை அணுவின் படம் காட்டு. ஆறு தம்படி சேர்ந்தால் அரை அணுவாகும். இவைகளில் சிலவற்றில் அதிக செம்பு கலந்திருப்பதைக் காணலாம். என்றாலும் இவைகளெல்லாம் நிக்கல் நாணயங்களே.

மூன்ருவது வரிசையில் காலணுவின் படம் காட்டு. தம்படியின் படம் காட்டு. மூன்று தம்படி சேர்ந்தால் கால் அணுவாகும். இவைகள் எல்லாம் செம்பு நாணயங்கள்.

ஒரு ரூபாயில் இரண்டு அரை ரூபாயும், நான்கு கால் ரூபாயும், எட்டு அரைக்கால் ரூபாயும், பதினறு அணுக்களும் இருக்கின்றன.

ஒரு அணுவில் இரண்டு அரை அணுக்களும், நான்கு காலணுக்களும், பன்னிரண்டு தம்படிகளும் இருக்கின்றன.

அரை அணுவில் எத்தனை தம்படிகள் உண்டு?

கால் ரூபாயில் எத்தனை அரை அணுக்கள் உண்டு?

ஒரு ரூபாயில் எத்தனை அரை அணுக்கள் உண்டு?

அரை ரூபாயில் எத்தனை காலணுக்கள் உண்டு?

தங்கத்தால் செய்த நாணயமும் உண்டு. அதற்குச் சவரன் என்று பேர். அதை நாம் இக்காலத்தில் உபயோகிக்கிறதில்லை.

கடுதாசியால் செய்த பணமும் உண்டு. நீ பெரியவனுகும்போது அதை உபயோகிப்பாய். இப்போது உனக்கு மற்ற நாணயங்களை உபயோகிக்கத் தெரிந்தால் போதும்.

இலக்கணம்

நாணயங்களில் சிலவற்றின் பெயர்களை எழுது.

10. வண்டிகள்

பாகம் 1.

கிராமங்கள்	சௌகரியமாய்
வியாபாரச் சரக்குகள்	தற்காலம்
மோட்டார்	ஞானி
பலமான வில்	சோகுசாய்
ஜட்கா வண்டி	அனைத்தையும்
பீட்டன் வண்டி	மின்சார சக்தி
ஏழைகள்	உருளாவிட்டால்
இலகுவான	பல்லக்கில்
டிராம் வண்டி	மறக்கத்தக்கதல்ல

வண்டிகளில் பலவகை உண்டு. நமது கிராமங்களில் பெரும்பாலும் மாட்டு வண்டிகளை நாம் உபயோகிக்கிறோம். சிலவற்றில் ஒரு மாடு பூட்டியிருக்கும். வேறு சிலவற்றில் இரண்டு மாடுகள் பூட்டியிருக்கும். இவற்றை ஜனங்கள் ஏறிப் போவதற்கும், வியாபாரச் சரக்குகளை ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கொண்டுபோவதற்கும் உபயோகிக்கிறார்கள்.





கட்டை வண்டிகளை மனிதர் இழுத்துக் கொண்டு போகிறதையும் பார்க்கிறோம். இவற்றில் இலகுவான பாரங்களை ஏற்றிக்கொண்டு போவார்கள்.

பட்டணங்களில் குதிரைவண்டி, மோட்டார் வண்டி, டிராம் வண்டி முதலிய வேறு விதமான



வண்டிகளைக் காண்கிறோம். இவ்வண்டிகளில் பலமான வில் இருப்பதனால் சற்றுக் கரடு முரடான பாதையில் சென்றாலும் அவற்றில் ஏறிப் போகிறவர்களுக்கு அதிகமாகக் கஷ்டம் தெரிவதில்லை. சாதாரண குதிரை வண்டியை ஜட்காவண்டி என்று சொல்வார்கள். குதிரை வண்டிகளில் இன்னும் ஒருவகை உண்டு. அதில் நான்கு அல்லது ஐந்து பேர் கால்களைத் தொங்கவிட்டுச் சௌகரியமாய் உட்கார்ந்து பிரயாணம் செய்யலாம். இதில்



பூட்டியிருக்கும் குதிரை பெரிதாயிருக்கும். இதன் பேர் பீட்டன் வண்டி. இதற்கு வாடகை அதிகம்.

தற்காலம் எந்தப் பட்டணத்திலும் பூம் பூம் என்று சத்தமிட்டுக்கொண்டு அதிவேகமாய் ஓடும் மோட்டார் வண்டிகளைப் பார்க்கலாம். இவை

பார்க்க அழகாயும் பிரயாணம் செய்யச் சௌகரியமாயும் இருக்கும். நான்கு பேர் வசதியாய் உட்காரலாம். சென்னைப்பட்டினத்தில் அநேக ஆயிரம் மோட்டார் வண்டிகளிருக்கின்றன. இவை ஓடுவதற்குப் பெட்ரோல் என்ற ஒருவகை எண்ணெய் வேண்டும்.



மோட்டார் வண்டிகளில் வேருெரு வகை உண்டு. இதற்கு மோட்டார் பஸ் என்று பேர். இது நாம் முன் கூறிய வண்டிகளைவிட மிகப் பெரிது. சுமார் பதினறு அல்லது பதினெட்டுப் பேர் ஏறிப்போகலாம். இது பொதுவாய் வாடகைக்கு ஓடும். பட்டணங்களில் எல்லாம் இதை மிகச் சாதாரணமாய்ப் பார்க்கலாம். இதற்கு வாடகையும் மிகக் குறைவாகையால் ஏழைகள்கூட இதில் ஏறிச் செல்வதை நாம் பார்க்கலாம்.



சென்னைப்பட்டினத்தில் டிராம் என்று ஒரு வகை வண்டியுண்டு. இது மோட்டார் பஸ் வண்டியைவிடப் பெரியதாயிருக்கும். ஐம்பது அறுபது ஆட்கள்கூட இதில் போகலாம். இது

சுத்தமாயும் அழகாயும் இருக்கும். ரோட்டின் மீதுள்ள இருப்புப்பாதையில் இது ஓடுவதால் இதில் அதிக ஆட்டம் இல்லாமல் சொகுசாய்ச் செல்லலாம். இது மின்சார சக்தியினுல் ஓடுகிறது. இதற்கும் வாடகை மிகச் சொற்பம்.

பாகம் 2.

எல்லா வண்டிகளுக்கும் சக்கரம் உண்டு. கட்டை வண்டியானுலும், கூண்டு வண்டியானுலும், மோட்டார் வண்டியானுலும், மின்சார வண்டியானுலும், ஆள் இழுக்கும் வண்டியானுலும், மாடு இழுக்கும் வண்டியானுலும் சக்கரம் இல்லையானுல் அது வண்டியாகாது. சக்கரம் உருளாவிட்டால் வண்டி ஓடாது. சக்கரத்துக்கு உருளும் தன்மை யிருக்கிறதனுல்தான் பெரிய பாரங்களையும் வண்டிகளிலேற்றி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டுபோகிறோம். வண்டிகள் இல்லாவிட்டால் வியாபாரச் சரக்குகள் அனைத்தையும் குதிரை, கழுதை, மாடு, ஒட்டகம் முதலிய மிருகங்கள் மேலேற்றித்தான் கொண்டுபோக வேண்டியிருக்கும். மனிதரும் அடிக்கடி பாரம் சுமக்க வேண்டியிருக்கும். கால் நடையாகவே பிரயாணமும் செய்யவேண்டியிருக்கும். ஆண்மக்கள் ஒரு வேளை மிருகங்கள்மேல் சவாரி செய்தாலும் பெண்கள் பிரயாணம் செய்வது கஷ்டம். முற்



காலத்திலே நமது தேசத்தில் செல்வர்கள் பல்லக்கில் போய்வருவது வழக்கம். பல்லக்கைச் சுமக்க இரண்டு அல்லது நான்கு கூலியாட்கள் வேண்டும். கூலி அதிகம் கொடுக்க வேண்டும்.



ஆகவே, நாம் குப்பை வண்டியைப் பார்க்கும் போதுகூட அதுவும் ஒரு அற்புதம் என்றே நினைக்கவேண்டும். ஏனென்றால் அதிலும் சக்கரம் இருக்கிறது. இந்தச் சக்கரத்தை முதல் முதலாவது கண்டுபிடித்த ஞானி யாரோ? அவர் பேர் ஒருவருக்கும் தெரியாது. அவரால் நாம் அடைந்திருக்கும் நன்மை மறக்கத்தக்கதல்ல.

கேள்விகள்

1. கிராமங்களில் சாதாரணமாய் உபயோகிக்கும் வண்டிகள் எவை?

2. டிராம் வண்டிக்கும் மோட்டார் வண்டிக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?

3. உனக்கு எல்லா வண்டிகளையும்விட எந்த வண்டியில் ஏற அதிகப் பிரியம்?

4. எல்லாவித வண்டிகளுக்கும் பொதுவாய் உள்ள பாகம் என்ன?

இலக்கணம்

கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச்சொற்களைச் சேர்த்துப் படி:—

1. கிராமங்களில் மாட்டு —— உபயோகிக்கிறார்கள்.
2. —— பூம் பூம் என்று சத்தமிட்டுக்கொண்டு ஓடும்.
3. குதிரை வண்டியை —— என்று சொல்வார்கள்,

11. ரெயில்வண்டிப் பிரயாணம்

பாகம் 1.

சிற்றப்பன்	தென்பட்டது
டிக்கட்	சாய்ந்தது
அவசரமாய்	நீராவி யந்திரம்
நிலக்கரி	மௌனமாயிருந்தான்
சுரங்கப் பாதை	சக்தியினுல்
ஸ்டேஷனுக்கு	குடைந்து

ரங்கசாமி ரெயில்வண்டியில் பிரயாணம் செய்ததேயில்லை. ஆகையால் அவன் சிற்றப்பன் அவ



னைத் தன்னேடு ஊருக்கு வரும்படி அழைத்த போது, அவன் அதிக சந்தோஷத்துடன் சம்மதித்தான். ஒரு சின்னப் பெட்டியில் அவன்

தனக்கு வேண்டிய உடுப்புக்களை எடுத்து வைத்துக்கொண்டு உடனே புறப்பட்டான்.

ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும் அவன் சிற்றப்பன் போய் இரண்டு மூன்ருவது வகுப்பு டிக்கட் வாங்கிக்கொண்டு வந்தான். அவர்கள் ஜனக்கூட்டத்தில் ஒரு பக்கத்தில் நின்ருர்கள். ஒரு கூலியாள் மணி அடித்தான். கை சாய்ந்தது. தூரத்திலே ரெயில்வண்டி தென் பட்டது. ரங்கசாமி பெட்டியை ஒரு கையில் எடுத்துக்கொண்டு மறு கையால் தன் சிற்றப்பன் கையைப் பிடித்துக்கொண்டான்.

ரெயில் வந்து நின்றவுடன் அவர்கள் அவசரமாய் ஏறி ஒரு வண்டியில் உட்கார்ந்து கொண்டார்கள். ரங்கசாமி ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டான். விற்பனை செய்பவர்கள், 'முறுக்கு வாங்கலையோ முறுக்கு!', 'பால் காப்பி!', 'வெற்றிலை பாக்கு சுருட்டு சிகரெட் பொடி!', 'சோடா', 'கலர்' என்று பலவிதமாய்க் கூவிக்கொண்டு போனர்கள். ஐந்து நிமிஷத்திற்குள் மறுபடியும் மணி அடித்தது. ஒருவன் ஒரு பச்சைக்கொடியைக் காட்டினன். ரெயில்வண்டி ஒரு உசில் அடித்துக் குப் குப் குப் என்று புறப்பட்டது. ரங்கசாமிக்கு இருந்த ஆனந்தத்தை என்ன சொல்வது! "சிற்றப்பா, ரெயில் வண்டி என்ன வேகமாய் ஓடுகிறது! இந்த மரங்கள் செடிகள் வீடுகள் எல்லாம் ஓடுவனபோல் இருக்கின்றன. சிற்றப்பா, பாலத்தின்மேல் ரெயில் வண்டி போகும்போது எனக்குப் பயமாயிருக்கிறது. பாலம் உடைந்துபோகாதா? எனக்கு ரெயில்வண்டியிலேயே எந்நாளும் இருக்க இஷ்

டம். வேடிக்கை பார்த்துக்கொண்டே இருக்க லாம்" என்று ஓயாமல் அவன் பேசிக்கொண்டே யிருந்தான்.

பாகம் 2.

கடைசியில் ரங்கசாமி, "சிற்றப்பா, இந்த ரெயில் வண்டி எப்படி ஓடுகிறது?" என்று கேட்டான்.



அதற்கு அவன் சிற்றப்பன், "ரெயில்வண்டி ஸ்டேஷனுக்கு வந்தபோது முதலாவது இருந்த வண்டியைக் கவனித்தாயா? அந்த வண்டிதான் நீராவி யந்திரம். அதுதான் மற்ற வண்டிக ளெல்லாவற்றையும் இழுத்துக்கொண்டு போகும். அதிலே தண்ணீர் பிடித்துவைத்து நிலக்கரி

போட்டு எரித்துக் கொதிக்கவைப்பார்கள். அந்தத் தண்ணீரிலிருந்து எழும் ஆவியின் சக்தியினால் ரெயில்வண்டி ஓடுகிறது" என்று சொன்னான்.

சற்றுநேரம் ரங்கசாமி மௌனமாயிருந்தான். அதற்குள்ளாக ரெயில் ஒரு சுரங்கப் பாதைக்குள் பிரவேசித்தது. திடீரென்று வண்டி இருட்டாயிற்று. வண்டிக்குள்ளேயிருந்த விளக்குகள் எரிந்தன. ஒரு நிமிஷத்துக்குள் ரெயில் சுரங்கப் பாதையை விட்டு வெளியேறவே விளக்குகள் அணைந்துபோயின. "சிற்றப்பா, இதென்ன? வண்டி ஏன் இருட்டாயிற்று!" என்று ரங்கசாமி கேட்டான். அதற்கு அவன் சிற்றப்பன், "வெளியே எட்டிப்பார். நமது ரெயில் ஒரு சின்ன மலைக்குள்ளே புகுந்து வெளியே வந்திருக்கிறது" என்றான். ரங்கசாமி எட்டிப்பார்த்தான். அவனுக்கு இருந்த ஆச்சரியம் கொஞ்சமல்ல. அவன் சிற்றப்பன் அவனைப் பார்த்து, "இதை விட எத்தனையோ மடங்கு பெரிய மலைகளையும் குடைந்து இருப்புப்பாதைகள் போட்டிருக்கிறார்கள். மிகப் பெரிய நதிகள்மேலும் பாலம் போட்டிருக்கிறார்கள். ஆகையினாலேதான் நாம் சொற்பச் செலவிலே பெரிய நதிகளையும் பெரிய மலைகளையும் கடந்து ஊர்களுக்குப் போய்வருகிறோம்" என்றான்.

அவர்கள் ஊர்போய்ச் சேர்ந்தவுடன் தங்கள் சாமான்களைப் பத்திரமாய் எடுத்துக்கொண்டு வண்டியை விட்டு இறங்கினார்கள். ரங்கசாமிக்கு ரெயில்வண்டியை விட்டுப்போவது விசனம். ஆனாலும், "நான் திரும்ப வீட்டுக்குப் போகும்

போது ரெயில்வண்டியிலேதானே போகவேண்டும்!" என்று சொல்லி மனத்தைத் தேற்றிக் கொண்டு போனான்.

கேள்விகள்

1. கை சாய்வது எதற்கு அடையாளம்?
2. ரெயில் வருமுன்னே ஏன் மணி அடிக்கிறான்?
3. ரெயில் புறப்படுமுன்னே ஏன் மணி அடிக்கிறான்?
4. பச்சைக்கொடி காட்டினால் அர்த்தமென்ன?
5. சிவப்புக்கொடி காட்டினால் அர்த்தமென்ன?
6. ரங்கசாமி ரெயில்வண்டியிலிருந்து பார்த்த அதிசயங்கள் எவை?
7. ரெயில்வண்டி எப்படி ஓடுகிறது?

இலக்கணம்

ஒரு கூலியாள் மணி அடித்தான்.

1. இதில் பெயர்ச்சொற்களைக் காட்டு.
2. கூலியாள் செய்த வேலை என்ன?
3. மணியடிப்பது யாருடைய தொழில்?

12. சிங்காரவேல் கதை

பாகம் 1.

யந்திர சாலை	பிழையினாலே
அகால மரணம்	உபாத்தியாயினி
காப்பாற்றி	பேனாக்கத்தி
சின்னஞ் சிறிய	தீபாவளிக்கு
பொழுது	விடியுமோ
உபகாரி	கோடிப் புண்ணியம்

சிங்காரவேல் என்ற ஒரு பையன் இருந்தான். அவன் மூன்று வயதாயிருக்கையில் அவன் தகப்பனார் ஒரு யந்திரசாலையில் வேலைசெய்து ஏதோ

ஒரு பிழையினலே அகால மரணமடைந்தார். அவன் தாய் பதினைந்து ரூபாய்ச் சம்பளத்துக்கு உபாத்தியாயினி வேலைசெய்து அவனையும் அவன் தங்கை பத்மாவதியையும் காப்பாற்றிவந்தாள்.

சிங்காரவேல் தனக்கு ஒரு பேனக்கத்தி வேண்டுமென்று அநேக நாளாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் தாய், "மகனே, பேனக்கத்தி வாங்க ஆறு அணு வேண்டுமே. என் கையிலே காசு இல்லை. ஆனல் நீ சாயங் காலங்களில் ஏதாவது சின்னஞ்சிறிய வேலை செய்து பணம் சம்பாதித்தாயானல், அதைச் சேர்த்து வைத்திருந்து கத்தி வாங்கலாம்" என் ருள். அப்படியே அவன் புல் அறுத்து, விறகு பொறுக்கி, அவற்றை விற்று இரண்டு வாரத்திற் குள் ஆறு அணுச் சேர்த்துவிட்டான். தீபா வளிக்கு முந்தின நாள் அவன் தாய், "சிங்காரம், நாளைக்குத் தீபாவளி அல்லவா? உனக்கு இஷ்ட மானல் நீ நாளைக் காலையிலே போய்ப் பேனக் கத்தி ஒன்று வாங்கிக்கொள்" என்ருள். சிங்கார வேலுக்கு அன்றிரவு தூக்கங்கூட வரவில்லை. பொழுது எப்பொழுது விடியுமோவென்று காத்துக்கொண்டே யிருந்தான்.

பாகம் 2.

பொழுது விடிந்ததும் சிங்காரவேல் கடைக் குப்போகப் புறப்பட்டான். அவன் சட்டைப் பையிலே ஆறு அணு இருந்தது. வழியிலே ஒரு சிறு பையன் விம்மி விம்மி அழுதுகொண்டு வந் தான். அவன் கட்டியிருந்த வேஷ்டி கிழிந்து போயிருந்தது. சிங்காரவேல் அவனைப் பார்த்து, "ஏன் அழுகிருய்?" என்று கேட்டான். அதற்கு

அவன், "எங்கள் மாட்டைப் பிடித்துப் பவுண்டிலே அடைத்து வைத்திருக்கிறார்கள். இனி நாலு அணுக் கொடுத்தால்தான் மாட்டை வெளியே விடுவார்கள். என்னிடத்தில் ஒரு காசு கூடக் கிடையாது. எனக்குத் தாயும் இல்லை, தகப்பனும் இல்லை. மாமாவிடம் இருக்கிறேன். மாட்டை ஓட்டிக்கொண்டு போகாவிட்டால் மாமா என்னை அடிப்பார்" என்று சொல்லி அழுதான். சிங்காரவேல் அவனை அழவேண்டாம் என்று சொல்லி, "உன் பேர் என்ன?" என்று கேட்டான். அவன், "என் பேர் சோமு" என்றான், சிங்காரவேல் சோமுவைக் கூட்டிக்கொண்டு பவுண்டுக்குப் போனான்.

பவுண்டுக்காரன், "மாடு யாருடையது?" என்று கேட்டான். சோமு, "என்னுடையது!" என்றான்.



"மாட்டைப் பிடித்துக்கொண்டுபோகப் பணம் கொண்டுவந்திருக்கிறாயா?" என்று பவுண்டுக்

காரன் கேட்டான். "இல்லே, சாமி. உங்களுக்குக் கோடிப் புண்ணியம். என்னிடத்தில் ஒரு தம்படியும் கிடையாது. ஆனல் மாட்டை ஓட்டிக் கொண்டு போகாவிட்டால் மாமா என்னே அடிப்பார்" என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் சோமு அழுதான். பவுண்டுக்காரன், "காசு இல்லாவிட்டால் ஏன் இங்கு வந்தீர்கள்?" என்று சொல்லி அவர்களேத் துரத்திஞன். அப்போது சிங்காரவேல் தன் சட்டைப்பையில் கத்திக்காக வைத்திருந்த பணத்திலிருந்து நாலு அணுவை வெளியே எடுத்து, அதைப் பவுண்டுக்காரனிடம் கொடுத்தான். பவுண்டுக்காரன் ஆச்சரியப்பட்டு, ஒன்றும் பேசாமல் போய், பவுண்டைத் திறந்து, மாட்டை வெளியே விட்டான். சோமுவுக்கு அளவற்ற சந்தோஷம் உண்டாயிற்று.

சோமு தன் உபகாரிக்கு மிகவும் நன்றி சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குப் போய்விட்டான். சிங்காரவேல், "இரண்டு அணுவுக்குக் கத்தி வாங்க முடியாதே. என்ன செய்வது!" என்று நினேத்து வீட்டுக்குப் போய்த் தன் தாயினிடம் நடந்ததையெல்லாம் சொன்னுன். அவன் தாய் "அவனுடைய இரக்கமான குணத்தை மெச்சிக்கொண்டாள். நீ மறுபடியும் வேலே செய்து பணம் சம்பாதித்துக் கத்தி வாங்கலாம். இப்போது வா. அதிரசம் சுட்டு வைத்திருக்கிறேன். எடுத்துத் தின்" என்ருள்.

சிங்காரவேல் அதிரசத்தைத் தின்றுவிட்டுச் சட்டைப் பைக்குள்ளே தன் கையை இட்டான். அதிலே ஒரு கால்ரூபாயும், ஒரு இரண்டு அணுவும் கிடந்தன. இவை எப்படி இங்கே வந்தன

என்று யோசித்துப் பார்த்து, பவுண்டுக்கு ஓடிப் போய், "ஐயா, நான் உமக்குக் கால்ரூபாய் கொடுக்கவில்லையா? அது என் பையிலிருக்கிறதே!" என்றான். பவுண்டுக்காரன் சிரித்துக்கொண்டு, "நீ சோமுவுக்காகக் கால்ரூபாய் கொடுத்ததுபோல, நான் உனக்கு இந்தக் கால்ரூபாய் தீபாவளி இனாமாகக் கொடுத்தேன். நீ போய் உனக்கு இஷ்டமானதை வாங்கிக்கொள்" என்றான்.

சிங்காரவேல் பவுண்டுக்காரனுக்கு நன்றியும் வந்தனமும் சொல்லிவிட்டு ஓடிப்போய் ஆறு அணாவுக்கு ஒரு நல்ல பேனாக்கத்தி வாங்கிக் கொண்டான்.

கேள்விகள்

1. சிங்காரவேல் பேனாக்கத்தி வாங்குவதற்காகவைத்திருந்த பணம் அவனுக்கு எப்படிக் கிடைத்தது?
2. சிங்காரவேல் இரக்க சிந்தையுள்ளவன் என்று உனக்கு எப்படித் தெரியும்?
3. பவுண்டுக்காரன் சிங்காரவேலுக்குக் கால்ரூபாய் எப்படிக் கொடுத்திருப்பானோ?
4. சிங்காரவேலுடைய தாய் எப்படிப்பட்டவள்?

இலக்கணம்

1. ரெயில்வண்டி ஓடுகிறது.

ரெயில்வண்டி செய்த வேலை அல்லது தொழில் என்ன?

2. சிங்காரவேல் கத்தி வாங்கினான்.

கத்தி வாங்கியது யாருடைய தொழில்?

13. வௌவால்

நரம்புகள் தலைகீழாய் கிளைகளினூடும்
பூச்சிகள் உத்தரம் சாவகாசமாய்
தோற்பையிலே நாற்றம் பாதுகாப்பது
ஆகாரம் மெல்லிய

வௌவால் ஒரு விநோதமான பிராணி. அதற்குச் சிறகுகள் இருந்தாலும் அது பட்சி அல்ல. அதன் சிறகுகளில் குடைக்கம்பி போன்ற எலும்புகளும் தோலும் மாத்திரம் உண்டு. இறகுகள் கிடையா. அதன் உடல் நரியின் உடலைப் போலிருக்கும். முழுவதும் மெல்லிய மயிர் மூடியிருக்கும். அது முட்டையிடுவதில்லை; குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.



வௌவால் பகலில் தூங்கி இரவிலே பறக்கும். அதன் சிறகுகளிலே மிகவும் சிறிய நரம்புகள் பரவியிருக்கின்றமையால், அதன் கண்களை மூடிவிட்டால்கூட, வழியில் ஏதாகிலும் இருக்கிறதா இல்லையா என்று அது அறிந்துகொள்ளும். இதனாலேயே வௌவால் மரங்களின் கிளைகளினூடும் இடித்துக்கொள்ளாமல் வேகமாய்ப் பறக்கும்.

வௌவால் பூச்சிகளைத் தின்னும். ஆகாயத்தில் பறந்துபோகையில் அது வாயைத் திறந்துகொண்டே போகும். அப்போது அதன் வாய்க்குள்ளே அகப்படும் பூச்சிகள் எல்லாவற்றையும் அது தின்னும். இலைகளிலும் பூக்களிலும் உள்ள பூச்சிகளை அது தன் பின்னங்கால்களுக்கும் வாலுக்கும் நடுவிலே இருக்கிற தோற்பையிலே போட்டு வைத்துக்கொண்டு பிறகு சாவகாசமாய்த் தின்னும்.

கொசு, வண்டு முதலிய பூச்சிகளே வௌவாலுக்குப் பிரியமான ஆகாரம். ஆகையினாலே, நாம் வௌவாலைக் கொல்லாமல் பாதுகாப்பது நமக்கு நன்மையாய் இருக்கும்.

வௌவால் கூடு கட்டுகிறதில்லை. பெரும்பாலும் ஏதாவது ஒரு மரத்திலாவது பழைய கட்டடத்திலாவது கூட்டமாய் வசிக்கும். கிளை அல்லது உத்தரம் ஒன்றைக் காலால் பற்றிக்கொண்டு தொங்கும். அது தலைகீழாய்த் தொங்கிக்கொண்டு தூங்கும். வௌவாலின் குட்டிகளும் இப்படியே தொங்கும். இரை தேடப் போகும்போது வௌவால் தன் குட்டிகளைக் கூடவே தூக்கிக்கொண்டு போகும். குட்டிகளுக்கு ஐந்து வாரமான பிறகு அவற்றை ஒரு கிளையில் தொங்கவைத்துவிட்டுப்போகும். குட்டிகள் தாமாக இரைதேடப் பழகுமட்டும் தாய் இரைதேடிக் கொடுக்கும்.

வௌவால் குடியிருக்குமிடம் நாற்றம் அடிக்கும். ஆனால் அது மிகவும் சுத்தமான பிராணி. அது தன் சிறகுகளையும், முகத்தையும், பின்னங் கால்களையும்கூட நக்கிச் சுத்தம் செய்யும்.

கேள்விகள்

1. வௌவாலுக்கும் பட்சிக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?
2. வௌவால் எவ்விடங்களில் வாழும்?
3. வௌவால் இரை தேடும் விதம் எப்படி?

இலக்கணம்

கீழே உள்ளவற்றில் தொழிலைக் காட்டும் சொற்கள் எவை?

1. வௌவால் இரவில் பறக்கும்.
2. அது பூச்சிகளைத் தின்னும்.
3. நாம் வௌவால்களைக் கொல்லக்கூடாது.

14. நாய்

பாகம் 1.

உத்தரவுப்படி	முற்றத்தில்	எளிதில்
செத்துப்போ	கட்டளையிடும்போது	வெயிற்காலம்
பின்வருமாறு	அதட்டி	அழுக்காக்கிக்கொள்ளும்
கீழ்ப்படிய	மல்லாந்து	உண்ணி
வார்த்து	பக்ஷமாய்	

ஒருநாள் காலையில் பத்து மணிக்கு மூன்றாவது வகுப்புப் பிள்ளைகளுக்கு இயற்கைப் பாடம் நடந்தது. பாடத்தின் விஷயம் நாய். ஆதலால் முத்து

உபாத்தியாயரின் உத்தரவுப்படி தன் நாயைப் பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிக்கொண்டுவந்தான். வகுப்புக்குள்ளே வந்ததும் முத்து நாயைப் பார்த்து, "கறுப்பா, உபாத்தியாயருக்குக் கை கொடு" என்றான். கறுப்பன் உட்கார்ந்துகொண்டு தனது இடது முன்னங்காலை உபாத்தியாயரிடம் நீட்டியது. "எந்தக் கை?" என்று முத்து அதட்ட, அது அந்தக் காலைக் கீழே ஊன்றிக்கொண்டு வலது முன்னங்காலைக் கொடுத்தது. பிள்ளைக ளெல்லாரும் சிரித்தார்கள். "உன் நாய்க்கு வேறு என்ன வித்தையாவது தெரியுமா, முத்து?" என்று அவர்கள் கேட்டார்கள். "ஆம், தெரியும்" என்று சொல்லி முத்து நாயைப் பார்த்து, "கறுப்பா, படு" என்றான். அது உடனே படுத்துக்கொண்டது. "செத்துப்போ, கறுப்பா" என்று அவன் சொல்ல, அது கண்ணை மூடி மல்லாந்து படுத்துக்கொண்டு செத்ததுபோல் கிடந்தது. "நிச்சயமாய்ச் செத்தா போனாய், கறுப்பா?" என்று அவன் கேட்டதும் அது குதித்தெழுந்து நின்று வாலை ஆட்டிற்று. பிள்ளைகள் கை தட்டினார்கள்.

"முத்து, இதற்கு எப்படி இந்த வித்தையெல் லாம் கற்றுக்கொடுத்தாய் என்று எங்களுக்குச் சொல்" என்று பிள்ளைகள் கேட்டார்கள். முத்து உபாத்தியாயரைப் பார்த்தான். உபாத்தியாயர், "சரி, முத்து, நாயை எப்படிப் பழக்கினாய் என்று சொல் பார்ப்போம்" என்றார். ஆகவே முத்து பின்வருமாறு கூறினான்.

பாகம் 2.

"எங்கள் மாமா கறுப்பனை எனக்குக் கொடுத்த போது அது சின்னக் குட்டியாயிருந்தது. அதற்கு

எப்படி வித்தை கற்றுக்கொடுக்கலாம் என்று மாமாவைக் கேட்டேன். அதற்கு அவர், 'நீ கறுப்பனை எப்போதும் பக்ஷமாய் நடத்து. உனக்குக் கீழ்ப்படிய அதற்குக் கற்றுக்கொடு. அப்பொழுது அது எளிதில் எந்த வித்தையும் கற்றுக் கொள்ளும்' என்றூர். அதன்படியே நான் கறுப்பனை அதிக ஜாக்கிரதையாய்க் கவனித்துவருகிறேன். அதற்குத் தீனி ஒழுங்காய்க் கொடுத்து வருகிறேன். மத்தியானத்தில் அரிசி, காய், மாமிசம் எல்லாவற்றையும் ஒன்ருய்ச் சமைத்துக் கொடுக்கிறேன். இரவிலும் சோறு போடுகிறேன். மாமிசம் அதிகம் கொடுக்கிறதில்லை. அது தின்று முடிந்தவுடன் மீதியாயிருக்கிறதைக் குப்பையில் கொட்டிவிட்டுப் பாத்திரத்தை நன்ருய்க் கழுவிச் சுத்த ஜலம் வார்த்து வைப்பேன். கறுப்பன் வேண்டியபோதெல்லாம் போய்த் தண்ணீர் குடிக்கும்.

"வெயிற்காலத்தில் நான் ஒவ்வொரு நாளும் கறுப்பனைக் குளிப்பாட்டுவேன். சோப்புப் போட்டுத் தேய்த்துக் கழுவி, துவாலையால் நன்ருய்த் துடைத்து வீட்டு முற்றத்தில் வெயிலிலே கட்டிவைப்பேன். இல்லாவிட்டால் அது மண்ணில் புரண்டு மறுபடியும் அழுக்காக்கிக்கொள்ளும். குளிர்காலத்தில் மூன்று நாளைக்கு ஒருமுறை குளிப்பாட்டுவேன். கறுப்பனுக்கு உண்ணி வராதபடி அதிகக் கவனமாய்ப் பார்த்துவருகிறேன்.

"கறுப்பன் இரவில் என்னண்டை படுத்துக் கொள்ளும். ஆனால் அது என் பாயில் படுப்பதில்லை. அதற்கென்று ஒரு பாயும் ஒரு சின்னக் கம்பளித்துண்டும் வைத்திருக்கிறேன்.

"கறுப்பனுக்கு என்மேல் அதிகப் பிரியம். நான் சொல்லுகிறபடி செய்யும். அது எனக்குக் கீழ்ப்படியாவிட்டால் நான் அதோடு விளையாடுவதில்லை. நான் உலாவப் போகும்போது அதைக் கூட்டிக்கொண்டு போவேன். பள்ளிக்கூடத்துக்கு வரும்போது வீட்டில் நிறுத்திவிட்டு வருவேன். நான் ஏதாவது கட்டளையிடும்போது அது நான் சொல்லுகிறபடி செய்தால் 'பேஷ் பேஷ், கறுப்பா' என்று சொல்லித் தட்டிக்கொடுப்பேன். ஒரு துண்டு வெல்லமும் சிலவேளைகளில் கொடுப்பேன். நான் சொல்லுகிறபடி செய்யாவிட்டால், அதைத் தனிமையாய் அடைத்துவைப்பேன். தீனியும் வெல்லமும் ஒன்றும் கொடுப்பதில்லை. ஆகையால் கறுப்பன் நான் சொன்னபடியெல்லாம் செய்யும், எந்த வித்தையையும் எளிதில் கற்றுக்கொள்ளும்."

கேள்விகள்

1. கறுப்பன் கற்றிருந்த வித்தைகள் எவை?

2. முத்து கறுப்பனுக்காகச் செய்த காரியங்கள் எவை?

3. முத்து கறுப்பனுக்கு எப்படி வித்தைகள் கற்றுக் கொடுத்தான்?

இலக்கணம்

தொழிலை வினை என்றும் சொல்லலாம்.

முத்து நாயைப் பார்த்தான். பார்த்தது முத்து செய்த வினை.

கீழே உள்ளவற்றில் வினையை அல்லது தொழிலைக் காட்டும் சொற்களைக் கூறுக:—

1. நாய் வாலை ஆட்டிற்று.
2. மாமா அதை எனக்குக் கொடுத்தார்.
3. நான் அதற்குச் சோறு போடுகிறேன்.
4. நான் அதை தட்டிக்கொடுப்பேன்.

15. ஆடை

இது காரணமாகவே	தன்மைகள்
அணிந்துகோள்	நூல் நூற்று
மேன்மையான	சீலவை
ஏராளமாய்	துரும்பு
சொற்ப விலை	இழைக்கும்
தூசி	கைராட்டினம்
நெசவுத்தறி	விற்பனை
சீதோஷ்ண நிலை	முரடான
நெய்யப்பட்ட	சாயம்

நாம் அணியும் உடை சீதோஷ்ண நிலைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும். இது காரணமாகவே குளிர் அதிகமான தேசங்களில் கம்பளி உடைகள் அணிந்துகொள்ளுகிறார்கள். வெயில் அதிகமான தேசங்களில் பருத்திப்பஞ்சால்செய்த ஆடைகளை அணிவது வழக்கம். நாம் வசிக்கும் தமிழ் நாடு வெப்பமுள்ள நாடு. ஆகையால் உடை பெரும் பாலும் பருத்திப்பஞ்சால் செய்யப்பட்டது.

பருத்திப்பஞ்சால் நெய்யப்பட்ட துணிக்கு அநேக மேன்மையான தன்மைகள் உண்டு. முத

லாவது அது குறைந்த விலையுள்ளது. பருத்தி நமது தேசத்தில் ஏராளமாய் விளைவதனாலும், அதை நமது தேசத்திலேயே நூல்நூற்றுத் துணியாக நெய்வதனாலும் அதை நாம் சொற்ப விலைக்கு வாங்குகிறோம். இவை தவிர, அது மெல்லியதாக



வும் அணிய அழகானதாகவும் இருக்கிறது. பருத்தித் துணி அழுக்கடைந்தால் அதை இலகுவாய்ச் சலவைசெய்து சுத்தம் செய்யலாம். ஆகையால், வெயில் மிகுந்த நாட்டில் வாழும் தமிழராகிய நாம் பருத்தியால் செய்த ஆடைகளையே பெரும்பாலும் அணிகிறோம்.

பருத்திப் பஞ்சிலிருந்து நெய்யப்படும் வேஷ்டி, சட்டை முதலியவை எவ்விதம் கிடைக்கின்றன? முதலில் பருத்திப்பஞ்சை எடுத்து அதிலிருந்து கொட்டைகளையும், தூசி, துரும்பு, அழுக்கு முதலியவற்றையும் நீக்கிவிடுவார்கள். பிறகு அந்தப் பஞ்சை வண்டிகளில் ஏற்றிப்



பஞ்சை நூலாக்கும் யந்திரசாலைகளிருக்கும் இடங்களுக்கு அனுப்புவார்கள். அங்குப் பெரிய இயந்திரங்களின் உதவியால் பஞ்சை நூலாக்குவார்கள்.

சில இயந்திரங்கள் மிகவும் மெல்லிய நூலை இழைக்கும். சில சற்று முரடான நூலை நூற்கும். நூற்கும் இயந்திரங்கள் வருவதற்கு முன்னே, நமது நாட்டில் கை ராட்டினத்தைக்கொண்டு நூல் நூற்ருர்கள். தற்காலத்திலும் அநேகர் கை ராட்டினத்தைக் கொண்டு நூல் நூற்கிருர்கள்.



நூலை நூற்று அதற்குச் சாயம் போடுவார்கள். எந்தெந்த நிறத்தில் நூல் வேண்டுமோ அந்தந்த நிறத்தில் எல்லாம் நாம் நூலுக்குச் சாயம் போடலாம். இவ் வி த ம் நூலைச் சரிப்படுத்தினபின் அதைத் துணியாக நெய்வார்கள். நூல் நூற்பதற்கு இருக்கும் யந்திரங்களைப்போலவே துணி

களை நெய்வதற்கும் பெரிய யந்திரங்கள் உண்டு. துணிகளை நெய்தபிறகு அவற்றைப் பல ஊர்களுக்கும் விற்பனைக்காக அனுப்புவார்கள்.

வேஷ்டிகளையும் புடைவைகளையும் அவை நெசவுத் தறியிலிருந்து வந்தபடியே நாம் அணியலாம். ஆனால் சட்டை, ரவிக்கை முதலியவற்றை அவரவர் அளவுக்குத்தக்கதாக வெட்டித் தைக்க வேண்டும். நெசவுத்தறியிலிருந்து வரும் துணியால் தையற்காரன் நமக்குப் பிரியமான உடுப்புக்கள் தைப்பான். நம் வீட்டிலும் நமது பெற்றோர் நமக்கு உடுப்புக்கள் தைத்துத் தருகிறார்கள்.

நாம் ஆடைகளை நமது சௌகரியத்துக்காகவே அணிகிறோம். ஆகையால், ஒவ்வொருவரும் அவரவர் அவசியத்துக்குத் தக்க உடைகளைத் தரிக்கவேண்டும். பட்டு உடுத்தல் பஞ்சாடை உடுப்பதிலும் மேல் என்றெண்ணுவது தவறு.

கேள்விகள்

1. தமிழ் நாட்டாராகிய நமக்குப் பருத்தி நூலாடையே தகுந்த உடை என்பதற்கு மூன்று காரணங்கள் கூறு.

2. நீ போட்டிருக்கும் சட்டை சட்டையாகுமுன் எப்படியெல்லாம் உரு மாறிற்று என்று சொல்.

இலக்கணம்

ஒரு தொழிலைக் காட்டும் சொல் வினைச்சொல்.

கீழே உள்ளவைகளில் வினைச்சொற்கள் எவை?

1. குளிர் தேசங்களில் கம்பளி உடை அணிந்து கொள்ளுகிறார்கள்.

2. நமது தேசத்தில் பருத்தி விளைகிறது.

3. இயந்திரங்கள் நூலை இழைக்கும்.

4. நாம் ஆடைகளை சௌகரியத்துக்காக அணிகிறோம்.

16. குமணர்

வெகுகாலத்துக்கு	தர்ம சிந்தை
எளியவர்கள்	பொற் பாத்திரம்
அறுசுவை	பதார்த்தங்கள்
புலவர்	மரியாதை
நற்குணங்கள்	மன்னர்
புகழ்ந்து	கொண்டாடி
பொறுமையாய்	உத்தியோகம்
பாடல்கள்	கல்விமான்
வருந்தி	திறமையுள்ள
வாள்	நல்வரவேற்று
உணர்ந்து	ஆசி

வெகுகாலத்துக்கு முன்னே நமது தேசத்தில் குமணர் என்று ஒரு அரசர் இருந்தார். அவர் கல்வியில் மிகவும் பிரியமுள்ளவர். தர்மசிந்தை உடையவர். எளியவர்களுக்கு உதவிசெய்ய ஆசையுடையவர். ஏழைகள் யார் வந்தாலும் அவர்களுக்கு நெய்யோடு உணவளிப்பார். பொற்பாத்திரத்தில் சாதமும் அதைச் சுற்றிச் சில சிறு பாத்திரங்களில் அறுசுவையடங்கிய பலவிதப் பதார்த்தங்களும் கொடுப்பார். விசேஷமாய்ப் புலவர் யாராகிலும் அவரைத் தேடி வந்தால், அவருக்கு அன்போடு மரியாதை செய்வார்.

இவருக்கு ஒரு தம்பி இருந்தான். அவனுக்குக் கல்வியும் இல்லை, நற்குணங்களும் இல்லை. தன் தமையனாரை எல்லாரும் புகழ்ந்து கொண்

டாடினது அவனுக்கு மிகவும் பொருமையாய் இருந்தது. ஆகவே அவன் சில துஷ்டர்களைச் சேர்த்துக்கொண்டு தன் தமையனாரிடத்திலிருந்து இராஜ்ஜியத்தைப் பிடுங்கிக்கொண்டு, அவரை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டான். குமணர் ஒரு காட்டுக்குச் சென்று அங்கே வாழ்ந்துகொண் டிருந்தார்.

அக்காலத்தில் பெருந்தலைச்சாத்தனார் என்று ஒரு கல்விமான் இருந்தார். அவர் மிகவும் அருமையான பாடல்களைப் பாடும் திறமையுள்ள வர். ஆனால் அவர் ஏழை. குமணர் காட்டிலிருக் கிறார் என்று கேள்விப்பட்டு, அவரிடம் வெகு மானம் பெறலாம் என்ற எண்ணத்துடன் அவர் அவரைத் தேடிக் காட்டுக்குப் போனார். குமண மன்னரைக் கண்டதும் ஒரு பாடலை அவரிடம் பாடினார். குமணர் அவருக்குக் கொடுக்கத் தம் கையில் ஒன்றுமில்லாததை நினைத்து மனம் வருந்தி, புலவரைப் பார்த்து, "ஐயா, என் நாட்டை இழந்ததைக்காட்டிலும் உம்மை வெறுங்கையாய் அனுப்புகிறது எனக்கு அதிக வருத்தமாயிருக் கிறது. என் தம்பி என் தலையைத் தன்னிடம் கொண்டுவருகிறவருக்கு மிகுந்த பணம் கொடுப்ப தாக விளம்பரம் செய்திருக்கிறானும். இதோ என் வாள். இந்த வாளால் நீர் என் தலையை வெட்டி என் தம்பியினிடம் கொண்டுபோய்க் கொடும். அவன் உமக்குப் பணம் கொடுப்பான்" என்று சொல்லித் தம் வாளை அவர் கையில் கொடுத்தார். புலவர் இதைக் கேட்டு மனம் பதறி, "அரசரே, வேண்டாம், நான் போய்வருகிறேன்," என்று சொல்லிக் குமண மன்னரின் வாளை மாத்திரம் வாங்கிக்கொண்டு அவர் தம்பியிடம் போனார்.

நடந்த சங்கதியை அரசரின் தம்பி கேட்டவுடன், தன் தமையனுர் எவ்வளவு நல்லவர் என்பதை உணர்ந்து, தானும் மனம் மாறினுன். தன் தமையனுருக்கு உடனே ஆள் அனுப்பி, அவரை நல்வரவேற்று, அவருக்கு இராஜ்ஜியத்தைத் திரும்பக் கொடுத்துவிட்டான். குமணர் தம் தம்பிக்கு ஒரு பெரிய உத்தியோகம் கொடுத்தார். சகோதரர் இருவருக்கும் புலவர் ஆசி கூறி, அநேக வெகுமதிகள் பெற்று, தம் ஊர் போய்ச் சேர்ந்தார்.

கேள்விகள்

1. குமணர் என்ற அரசரை ஜனங்கள் புகழ்ந்ததற்குக் காரணம் என்ன?

2. பெருந்தலைச்சாத்தனுருக்குக் குமணர் கொடுத்த வெகுமதி என்ன?

3. குமண மன்னருக்கு இராஜ்ஜியம் திரும்ப எப்படிக் கிடைத்தது?

இலக்கணம்

முதல் பாராவிலுள்ள வினைச்சொற்களை எடுத்தெழுது.

17. வார்த்தை அமைப்பு விளையாட்டு

சர்க்கரை	ரப்பர்	பஞ்சு
காப்பி	இரும்பு	நெய்
பட்டு	கம்பளி	அரிசி

அடியிற்கண்ட வாக்கியங்களில் விடப்பட்டிருக்கும் வார்த்தையை எழுது. அதற்காக மேலே கொடுத்துள்ள வார்த்தைகளில் தகுந்ததைத் தெரிந்துகொள்.

1. ——— மலையில் வளரும் ஒரு செடியின் விதை.

2. ——— ஒரு பூச்சியின் உடலிலிருந்து வரும்.

3. ——— மாட்டுப் பாலிலிருந்து எடுக்கப்படும்.

4. ——— ஒரு மரத்தின் பாலிலிருந்து செய்யப்படும்.

5. ——— ஆட்டு ரோமத்திலிருந்து நெய்யப்படும்.

6. ——— கரும்பின் சாற்றிலிருந்து செய்யப்படும்.

7. ——— ஒரு செடியின் விதைக்குள் இருக்கும்.

8. ——— ஒரு செடியில் உண்டாகும்.

9. ——— பூமிக்குள்ளிருந்து வெட்டியெடுக்கப்படும்.

18. தென்னைமரம்

முடைந்து
ஈர்க்குகள்
குரும்பை
அவசியம்
நேற்று
கறி வகைகள்
வஸ்து
திரிக்கலாம்
வலிதானதால்
வடுக்கள்
ஓலையின் மடல்
துடைப்பம்
செழித்தோங்கி
தாராளமாய்
கயிறு திரிக்கலாம்
தாளிக்கவும்
கோப்பரை
ஊறவைத்து

தென்னைமரம் உயர்ந்தோங்கி வளரும். அது சுமார் ஐம்பது அறுபது அடிவரை வளரும் தன்மையுள்ளது. அது மிகவும் வலிதானதனுல் எந்தக் காற்றுக்கும் இலகுவில் விழாது. மரத்தின் மீது அனேக வடுக்கள் தோன்றும். அவை முன் மட்டைகள் இருந்த இடத்தைக் குறிக்கும். வருஷம் ஒன்றுக்கு நாலு அல்லது ஐந்து மட்டைகள் மரத்திலிருந்து கீழே விழும். ஓலைகள் மிகவும் பிரயோஜனமானவை. ஓலையை முடைந்து வீட்டுக்குக் கூரையாக உபயோகிப்பார்கள். ஓலையின் மடலை விறகாய் எரிப்பார்கள். ஓலையின் ஈர்க்குகளைச் சேர்த்துக் கட்டித் துடைப்பம் செய்வார்கள்.

மரத்தின் உச்சியில் மடல்களின் மத்தியில் காய்களைப் பார்க்கிறோம். காய் பிஞ்சாயிருக்கும்போது அதைக் குரும்பை என்று சொல்வார்கள். குரும்பை முற்றினுல் இளநீர் ஆகும். இளநீர் முற்றித் தேங்காய் ஆகும். தென்னைமரத்தில் வருஷத்

திற்கு ஆறுதடவை தேங்காய் கிடைக்கும். ஒவ்வொரு தடவையும் சாதாரணமாய் பத்து அல்லது பதினைந்து காய் கிடைக்கும். ஆனால் செழித்தோங்கி வளரும் மரங்களில் நூறு காய் வரைக்கும் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள்.



தென்னைமரம் செழித்து வளர மணல்தரை அவசியம். மழையும் தாராளமாய் வேண்டும். தென்னைமரத்தைப் பயிரிடுகிறவர் முதலில் நெற்றுத் தேங்காயைத் தரையில் ஒரு அடி ஆழத்தில் புதைத்து வைப்பார்கள். அது இலேசாய் முளைப்பதற்காக அதன் முகப்பு மேலே தோன்றும்படி வைப்பார்கள். வைத்த சில மாதத்திற்குள் அதிலிருந்து சிறிய முளை தோன்றும். சிறிதுகாலம் முளையை வளரவிட்டால் அதிலிருந்து இரண்டொரு ஓலை தோன்றும். இதனிடையில் அதை நடவேண்டுமென்று வைத்திருக்கும் நிலத்தைப் பக்குவப்படுத்துவார்கள். ஆழமான ஒரு குழி தோண்டி, அதைப் பழைய எருவும், ஆற்று மணலும் கலந்த மண்ணால் நிரப்பி, முளைத்திருக்கும் தேங்காயைத் தரை மட்டத்திலிருந்து அரை

அடி ஆழத்தில் அக்குழியில் புதைத்து வைப்பார்கள்.

மரம் சிறிதாயிருக்கும்போது அதை ஆடுமாடு கடிக்காமல் மிகவும் ஜாக்கிரதையாய்க் காக்க வேண்டும். முதல் இரண்டு வருஷங்களிலும் அதற்கு ஒழுங்காய்த் தண்ணீர் ஊற்றவேண்டும். யாதொரு சேதமுமின்றி வளர்ந்த மரம் நான்கு வருஷத்தில் பலன் கொடுக்கும். ஆறு வருஷத்திற்குள் எல்லாத் தென்னம்பிள்ளைகளும் பலன் கொடுக்கும்.

மரம் வளர்ந்தபிறகு அதைப் பாதுகாப்பது எளிது. வருஷத்துக்கு இருமுறை மழைகாலத்திற்குமுன் நிலத்தை உழுது எருப்போட்டால், தென்னை செழித்தோங்கி வளர்ந்து, ஏராளமாய்க் காய்க்கும்.

தேங்காய் மிகவும் பிரயோஜனமானது. கறி வகைகள் சமைக்க அதைப் பெரும்பாலும் உபயோகிக்கிறோம். அதிலிருந்து எடுக்கும் எண்ணெயாகிய தேங்காய் எண்ணெயைக் கறிகள் தாளிக்கவும், பலகாரங்கள் சுடவும், தலையில் தேய்க்கவும்



உபயோகிக்கலாம். காய்ந்த தேங்காயைக் கொப்பரை என்பார். அதிலிருந்து பலவித சோப்புகளும், மிட்டாய் வகைகளும் செய்கிறார்கள்.

தேங்காயிலிருந்து இன்னும் ஒரு பிரயோஜன மான வஸ்து நமக்குக் கிடைக்கிறது. தேங்காயி லிருந்து உரித்த மட்டையை இரண்டொரு மாதம் தண்ணீரில் ஊறவைத்து, பின் அதை எடுத்துப் பலமுறை அடித்தால், அதிலிருக்கும் நார் தனித் தனியாய்ப் பிரிந்துவிடும். அந்த நாரை எடுத்துக் கயிறு திரிக்கலாம். இந்தக் கயிறு மிகவும் பலமும் மலிவுமானது. இந்த நாரிலிருந்து பலவிதப் பாய் களும் செய்கிறார்கள்.

கேள்விகள்

1. தென்னைமரத்தினால் உண்டாகும் பிரயோஜனங் கள் எவை? இந்தப் பாடத்தில் சொல்லப்படாத வேறு பிரயோஜனங்கள் உனக்குத் தெரியுமா?

2. தென்னை வருஷத்தில் சுமார் எத்தனை முறை காய் கொடுக்கும்? எத்தனை காய் கொடுக்கும்?

3. தென்னை செழிப்பாய் வளருவதற்கு என்ன செய்ய வேண்டும்?

இலக்கணம்

கோடிட்ட இடங்களில் வினைச்சொற்களைச் சேர்த்துப் படி:—

1. தென்னைமரம் உயர்ந்தோங்கி ——.
2. ஓலையின் மடலை விறகாய் ——.
3. தென்னை நான்கு வருஷத்தில் பலன் ——.
4. நாரை எடுத்துக் கயிறு ——.

19. குதிரை

பாகம் 1.

விசுவாசம்	நிதானமாய்
நெடுங்காலம்	கடிவாளம்
பிடரிமயிர்	வசதியாய்
சவாரி	போர்வீரர்
பண்டைக்காலம்	யுத்தக்களத்தில்
பிரதானமாய்	பேணுவார்கள்
மடிந்த	ஜாக்கிரதை

குதிரை நாயைப்போலவே அறிவுள்ள மிருகம். சாந்த குணம் உடையது, எஜமானிடத்தில் பிரியமும் விசுவாசமும் உள்ளது. ஆகையினலே குதிரையை அடித்து வேலை வாங்கவேண்டிய அவசியமில்லை. அன்பான வார்த்தைகளாலேயே அதை நடத்தலாம். அதற்குப் போதுமான அளவு தீனி போட்டு, நிதானமாய் வேலை வாங்கினுல், நெடுங்காலம் நல்ல வேலை செய்யும். குதிரை ஏறக்குறைய இருபத்தேழு வருஷம் உயிரோடிருக்கும்.

குதிரை பார்க்க அழகான மிருகம். அதன் மயிர் மெல்லியதாகவும், மினுமினுப்பாகவும், அதன் பிடரிமயிர் நீளமாகவும் இருக்கும். அதன் உடல் பருத்தும், கால் மெலிந்தும் இருக்கும். குதிரையைத் தினம் குளிப்பாட்டி, அதன் உடலைத் தேய்த்து, பிடரிமயிரை ஒரே அளவாய்க் கத்தரித்து வைத்தால், குதிரை மிக அழகாயிருக்கும்.

குதிரை புல், பூண்டு, வேகவைத்த கொள் முதலியவற்றைத் தின்னும். அது மாடுபோல் அசை போடாது. எதையும் நன்ருய் மென்று தின்னும்.

கூர்மையான பார்வையும், வேகமாய் ஓடும் சக்தியும் குதிரைக்கு உண்டு. அதன் வாயில் முன் பற்களுக்கும் பின்பற்களுக்கும் இடையிலே இடம் இருக்கிறது. கடிவாளம் போட இந்த இடம் வசதியாய் இருக்கிறது.. குதிரையின் வாயில் கடிவாளம்போட்டு, அதன் எஜமான் போக விரும்பும் இடத்துக்கு அதைத் திருப்பி நடத்துவான். வலதுபக்கம் திரும்பவேண்டுமானுல் வாயின் வலதுபக்கத்திலிருக்கும் வாரை இலேசாய் இழுப்பான். இதனுல் குதிரை வலதுபக்கம் திரும்பவேண்டுமென்று அறிந்துகொள்ளும்.

பாகம் 2.

நமது தேசத்திலே சாதாரணமாய்க் குதிரையைச் சவாரி செய்வதற்கும் வண்டி யிழுப்பதற்கும் உபயோகிப்பார்கள். காலிலே லாடம் அடித்து, அதன் குளம்புகள் தேய்ந்துபோகாதபடி காப்பார்கள். ரெயில் வண்டியும் மோட்டர் வண்டியும் வருவதற்கு முன்னே, அவசரமாய்ச் செய்தி அனுப்புவதற்கும், அவசரமாய்ப் பிரயாணம் செய்வதற்கும் உபயோகித்த மிருகம் குதிரையே.

மேலும் இந்தியாவிலும் மற்றத் தேசங்களிலும் பண்டைக்காலம் முதல் போர்வீரர் யுத்தங்களில் பிரதானமாய் உபயோகித்துவரும் மிருகம் குதிரையே. யுத்தக்களத்தில் எஜமான் மடிந்த இடத்தில் நின்று அவன் உடலைக் காத்த குதிரைகள் அநேகம்.

மேல்நாடுகளில் குதிரையை ஏர் உழவும், வயலிலே பற்பல விதமான வேலை செய்யவும், வண்டிகள் இழுக்கவும் உபயோகிப்பார்கள். அதை அன்புடன் காப்பாற்றி வேலைவாங்குவார்கள்.

முன்னே குதிரைகள் செய்த அநேகவிதமான வேலைகளைத் தற்காலத்தில் யந்திரங்கள் செய்கின்றன. மோட்டார் வண்டிகள் வந்தபின் குதிரை வண்டிகள் குறைந்துகொண்டே வருகின்றன. ஆனால் பந்தயக் குதிரைகளின் தொகை மாத்திரம் வருஷத்துக்கு வருஷம் அதிகப்பட்டுக்கொண்டு வருகின்றது. சென்னைப்பட்டினத்திலும், பெங்களூர், கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களிலும்

குதிரைப் பந்தயம் ஜனங்களுக்குப் பிரியமான ஒரு வேடிக்கை. பந்தயக் குதிரைகளை வெகு ஜாக்கிரதையாய்ப் பேணுவார்கள்.

கேள்விகள்

1. குதிரையின் வாயில் கடிவாளம் போடுவதற்குக் காரணம் என்ன?

2. குதிரைக்கு ஏன் லாடம் அடிக்கவேண்டும்?

3. குதிரையினுல் உண்டாகும் பிரயோஜனம் என்ன?

4. குதிரையின் குணத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

இலக்கணம்

குதிரை	—	குதிரைகள்
தேசம்	—	தேசங்கள்
அவன்	—	அவர்கள்
நான்	—	நாங்கள்
நீ	—	நீங்கள்

மேல்வரிசை ஒவ்வொன்றிலும் அர்த்தத்தில் காணப் படும் வித்தியாசம் என்ன? குதிரை என்ற சொல் ஒரு குதிரையைக் குறிக்கிறது; குதிரைகள் என்ற சொல் பல குதிரைகளைக் குறிக்கின்றது. இந்த மாதிரி மற்ற வரிசை களிலும் வித்தியாசம் இருக்கின்றது. அதைக் கண்டு பிடி.

20. பியூசெபாலஸ் என்ற குதிரை

பரிசோதித்து	அரண்மனை
குதிரையேற்றம்	சமஸ்தானத்துக்கு
மருண்டு	முயன்றும்
ஏமாற்றமுறுதேயும்	கனைத்தது
துக்கிப்பதுபோல்	நண்பன்

வெகு காலத்திற்கு முன்னே பிலிப்பு என்று ஒரு பெரிய அரசர் இருந்தார். அவருக்கு அலெக்சாந்தர் என்று பேர்கொண்ட ஒரு குமாரரிருந்தார். அலெக்சாந்தர் பன்னிரண்டு வயதாயிருக்கையில் ஒரு குதிரை வியாபாரி அரண்மனைக்கு ஒரு அழகான குதிரையைக் கொண்டுவந்தான். பிலிப்புக்குக் குதிரைகள்மேல் அதிகப்பிரியம். ஆகையால் அக்குதிரையைத் தாம் வந்து பரிசோதித்துப் பார்த்து வாங்க மனமுண்டானால் வாங்குவதாகச் சொல்லியனுப்பினார்.

இப்படிச் சொல்லிச் சற்று நேரத்தில் பிலிப்பும் அலெக்சாந்தரும் சமஸ்தானத்துப் பிரபுக்கள் சிலரும் மைதானத்துக்குப் போனார்கள். பிரபுக்களில் குதிரையேற்றத்தில் தேர்ந்த அநேகர் அக்குதிரை மீதேற முயன்றும் அவர்களால் முடியவில்லை. ஒவ்வொரு தடவையும் குதிரை மருண்டு பின்னங் கால்களில் நின்று கனைத்தது. அவர்கள் வந்து அரசரைப் பார்த்து, "அரசே, இக்குதிரை பார்க்க அழகாய் இருக்கிறதென்று ஏமாற்றமுறுதேயும். இதை அடக்க

ஒருவராலும் முடியாது. இது மகா முரட்டுக் குதிரை” என்றார்கள்.

இதைக் கேட்ட அலெக்சாந்தர் தம் தகப்பனாரைப் பார்த்து, “அப்பா, இவ்வளவு அழகான குதிரையை அனுப்பிவிட எனக்கு மனதில்லை. நான் அந்தக் குதிரைமேல் ஏறிப் பார்க்கப்போகிறேன். எனக்கு உத்தரவு கொடும்” என்றார். பிலிப்பு சிரித்துக்கொண்டு, “அநேக வருஷம் குதிரையேற்றத்தில் பழகின என் யுத்த வீரரைவிட நேற்றுப் பிறந்த குழந்தையாகிய நீ கெட்டிக்காரன் என்று எண்ணுகிறாயோ? என்றாலும் உனக்கு இஷ்டமானால் நீ போய் ஏறிப்பார். குதிரை உனக்கு அடங்குமானால் அதை நான் உனக்கு வாங்கிக் கொடுக்கிறேன். அது உனக்கு அடங்காவிட்டால் என்ன செய்வாய்?” என்றார். அதற்கு அலெக்சாந்தர், “அது எனக்கு அடங்காவிட்டால் நானே விலை கொடுத்து வாங்கிக்கொள்வேன்” என்று சொல்லி எழுந்து குதிரையிடம் போனார்.

அலெக்சாந்தர் குதிரையைப் பிடித்து, உடனே அதன் முகத்தைச் சூரியனுக்கு நேராகத் திருப்பினார். இதுவரைக்கும் குதிரை மருண்டதற்குக் காரணம் தன் நிழலையே பார்த்துப் பயந்ததே என்று அலெக்சாந்தர் கவனித்திருந்தார். அதன் முகத்தை நிழலைவிட்டுத் திருப்பவே குதிரை பயம் தெளிந்து அமைதியாய் நின்றது. அலெக்சாந்தர் அதன்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு மெல்லச் சவாரி விட்டார். பின் குதிரை விரைவாய்ப்போக விரும்புகிறதென்று கண்டு அதை விரைவாய் ஓட விட்டார். பிலிப்புக்கும் பிரபுக்களுக்கும் குதிரை

யைப்பற்றிய பயம் போகவில்லை. ஆனால் சற்று நேரத்திற்குள் அலெக்சாந்தர் அதை மெல்லப் போகும்படி செய்து, அது தமக்கு எவ்விதத்திலும் கீழ்ப்பட்டிருந்ததைத் தெளிவாகக் காட்டினார். குதிரையை அரசருக்கு எதிரே ஓட்டிக்கொண்டு

போய்க் குதிரையை விட்டிறங்கினார். எல்லாரும் கைகொட்டிச் சந்தோஷப்பட்டார்கள். பிலிப்புக்குத் தம் மகனைப்பற்றிய சந்தோஷம் கொஞ்சமல்ல. "என் மகனே, நீ என்னைக் காட்டிலும் பெரிய காரியங்களைச் செய்வாய்" என்று சொல்லிக் கொண்டு அந்தக் குதிரையை வாங்கி அவருக்குக் கொடுத்தார்.

அலெக்சாந்தர் அக்குதிரைக்கு பியூசெபாலஸ் என்று பேரிட்டார். பிலிப்பு இறந்தபின் அலெக்சாந்தர் அரசராகி அநேக யுத்தங்கள் செய்து

அவையெல்லாவற்றிலும் வெற்றிபெற்றுத் திரும்பி வந்தார். ஒவ்வொரு போரிலும் அவர் ஏறிச் சென்ற குதிரை இந்த பியூசெபாலஸ் என்ற குதிரையே. அது அவருக்கு ஒரு நண்பனைப் போலிருந்தது. அது இருபது வருஷம் அவ ரோடிருந்து ஒரு யுத்தத்தில் மாண்டுபோயிற்று. அலெக்சாந்தர் ஒரு நண்பனுக்காகத் துக்கிப்பது போல் அக்குதிரைக்காகத் துக்கித்தார். அதை ஞாபகப்படுத்தும்படியாக ஒரு பட்டணத்தைக் கட்டி அதற்குப் பியூசெபாலியா என்று பேரிட் டார்.

கேள்விகள்

1. பியூசெபாலஸ் என்ற குதிரை பிலிப்பு அரசருக் கெதிரே துஷ்டத்தனம் செய்ததற்குக் காரணமென்ன?

2. அலெக்சாந்தர் அக்குதிரையை எப்படி சாந்தப் படுத்தினர்?

3. அலெக்சாந்தருக்கு அக்குதிரைமேல் மிகவும் அன் பிருந்தது என்பது எதினல் தெரிகிறது?

இலக்கணம்

ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒருமை. பல பொருள்களைக் குறிக்கும் சொல் பன்மை.

கீழே உள்ள வார்த்தைகளில் ஒருமைச் சொற்கள் எவை? பன்மைச் சொற்கள் எவை? தனித்தனியே காட்டுக:

அரசன், அரண்மனை, பிரபுக்கள், குழந்தை, நண் பன், மரங்கள், மகள், மக்கள்.

21. தேரை

கொப்புளங்கள்	போன்றவை
வெள்ளைநீர்	அமைக்கப்பட்டிருக்கிறது
உபத்திரவப்படுத்துகின்ற	கத்தரித்து
திடீரென்று	பெருந்தீனி
பிழைத்திருந்தது	அனைத்தும்

தேரைகளைப் பார்த்திருக்கிறாயா? அவற்றின் முதுகிலே கொப்புளங்கள் போன்றவை இருக்கும். அவற்றினுள் ஒரு விதமான வெள்ளைநீர் இருக்கும். நாய் தேரையைக் கடித்தால் அதன் வாய் வெந்துபோம். தேரையைக் காப்பதற்

காகவே அதன் தோலில் இவ்வித நீர் அமைக்கப் பட்டிருக்கிறது.

தேரை நமக்குப் பிரயோஜனமான ஒரு பிராணி. நம்மைக் கடித்து உபத்திரவப்படுத்து கின்ற கொசுக்களையும், செடிகளை வெட்டும் புழுக்

களையும், பற்பல விதமான பூச்சிகளையும் தேரை பிடித்துத் தின்னும். ஒரு தேரையின் வயிற்றிற்குள் ஐம்பத்தைந்து புழுக்கள் இருந்தனவாம். மூன்று மாதத்தில் அது பதினுயிரம் பூச்சி தின்னும். ஒரு தேரையைப் பிடித்துத் தோட்டத்தில் விட்டால் அது செடிகளைப் புழுக்கள் ஒன்றும் கத்தரித்துப் போடாதபடி பார்த்துக்கொள்ளும்.

தேரை பூச்சி பிடிப்பதைப் பார்த்திருக்கிருயா? அது திடீரென்று நாக்கை நீட்டும். அதன் நாக்கு பிசுபிசென்று இருப்பதால், எந்தப் பூச்சியும் அதில் ஒட்டிக்கொள்ளும். தேரை பெருந்தீனி தின்பதா யிருந்தபோதிலும், ஆ கா ர ம் தண்ணீரின்றி அநேக நாட்கள் இருக்கக்கூடும். ஒரு தேரை இரண்டு வருஷம் அப்படி ஆகாரம் தண்ணீ ரின்றிப் பிழைத்திருந்தது.

தேரை இருபது வருஷம் உயிரோடிருக்கும். ஒரு வருஷத்தில் பதினுயிரம் முட்டையிடும். ஆனுல் தேரைக் குஞ்சுகள் அனைத்தும் உயிரோ டிருப்பதில்லை. ஏனென்ருல், பாம்பு, காகம், பருந்து, கோழிக்குஞ்சு, வாத்துக்குஞ்சு, எல்லாம் தேரைக் குஞ்சுகளைப் பிடித்துத் தின்னும்.

கேள்விகள்

1. தேரையை நாம் ஏன் கொல்லக்கூடாது?

2. தேரையின் உணவு முறையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. தேரை எத்தனை முட்டையிடும்? அவற்றில் எத்தனை பெரிய தேரையாகும்?

இலக்கணம்

சென்றுன், இருக்கிறது, வந்தது, போகிறேன், நடக்கிருய்—இந்த வினைச்சொற்களில் ஒவ்வொன்றும் ஒருமையைக் காட்டுகின்றது.

சென்றூர்கள், இருக்கின்றன, வந்தன, போகிறோம், நடக்கிறீர்கள்—இந்த வினைச்சொற்களில் ஒவ்வொன்றும் பன்மையைக் காட்டுகின்றது.

22. உப்பு

பழமொழி	வெறுப்பையே
ஜலம்	பாத்திகளில்
அம்பாரமாய்	போக்கிவிடுவார்கள்
பண்டகசாலைகள்	படிந்து
தேகவளர்ச்சி	உத்தியோகஸ்தர்
அழுகிப்போகும்	பஞ்சகாலம்
பண்டத்தை	வஸ்து

நாம் உண்ணும் உணவுகளுக்குச் சுவை கொடுப்பது உப்பே. “உப்பில்லாப் பண்டத்தைக் குப்பையில் அல்லவோ எறியவேண்டும்” என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். உப்பைத் தனியாய்த் தின்றுல், அது நமக்கு வெறுப்பையே தரும். ஆனுல் அதை மற்றப் பண்டங்களோடு சேர்த்து உண்டால், அது அவற்றின் சுவையையே அதிகப்படுத்தும்.

சுத்தமான உப்பு வெள்ளையாயிருக்கும். நாம் சாதாரணமாய்க் கடையில் வாங்கும் உப்பு சற்று அழுக்கு நிறம் கலந்தது. அது அதில் ஒட்டியிருக்கும் மற்றப் பொருள்களின் நிறம். நாம் உப்பைத் தண்ணீரில் கரைத்தால் அந்தத் தண்ணீ

ரில் அந்த அழுக்குகள் மிதக்கிறதைப் பார்க்கலாம். உப்பு முக்கியமாய்க் கடல் தண்ணீரிலிருந்து வருகிறது. ஆனால் சில ஏரிகளும் உப்பு ஜலம் நிறைந்திருப்பதனால், அவ்வித ஏரி ஜலத்திலிருந்து உப்பு எடுக்கலாம். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களில் உப்பை அநேகமாய்ப் பூமிக்குள்ளிருந்து வெட்டி எடுக்கிறார்கள்.



நமது தேசத்தில் கடல்நீரிலிருந்து உப்பு எடுக்கப்படுகிறது. கடற்கரையோரங்களில் உள்ள ஊர்களில் ஜனங்களுக்கு இது தொழிலாகிறது. கடல்நீரை இறைத்துப் பெரிய தொட்டிகளை நிரப்புவார்கள். அந்தத் தொட்டிகளிலிருந்து அதைப் பாத்திகளில் வார்ப்பார்கள். பாத்தியின் தரை கடினமாக இருக்கவேண்டும். அதற்காக உப்பு ஜலத்தை அதில் விடுமுன்னே அதன் தளத்தை நன்றாய் மிதித்து இறுக்கி, அதிலுள்ள

மணல், கல் முதலியவற்றைப் போக்கிவிடுவார்கள். உப்புத்தண்ணீர் அதில் சிலநாள் இருந்தால், சூரிய வெப்பத்தினுல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டேவரும். கடைசியாக ஜலம் எல்லாம் வற்றி உப்பு மாத்திரம் தரையில் படிந்து கிடக்கும். இது பார்க்கக் கண்ணுக்கு அழகாயிருக்கும். நன்ருய் உலர்ந்ததும் உப்பை ஒரு தட்டையான பலகையால் கூட்டி வாரி, ஓரிடத்தில் அம்பாரமாய்ச் சேர்ப்பார்கள்.

சேர்த்த உப்பை ஒருவரும் தொடாமலிருக்கும்படி சர்க்கார் காவல் இருக்கும்; ஏனென்ருல் உப்பு சர்க்காருக்கே சொந்தம். மேற்கூறிய விதம் உப்பை உண்டுபண்ணிஞலும், சர்க்காரின் அனுமதியின்றி அதை விற்கவோ கொள்ளவோ கூடாது. சர்க்கார் உத்தியோகஸ்தர் வந்து அளந்து அதில் வேலை செய்தவருக்கு விளைந்த உப்புக்குத் தகுந்த கூலி கொடுப்பார்கள். உப்பை அங்கிருந்து நேரே வியாபாரிகளுக்கு விற்கிறது வழக்கம். சில சமயங்களில் பண்டகசாலைகளில் அதைச் சேர்த்து வைப்பார்கள்.

நாம் மழையில்லாத காலத்தைப் பஞ்சகாலம் என்று சொல்வது வழக்கம். ஆனுல் உப்பு விளைவிக்கிறவர்களுக்கோ, மழைகாலமே பஞ்சகாலம். ஏனெனில் மழையில் உப்பு விளையாது. விளைந்த உப்பும் கரைந்துபோகும்.

உப்பு நமது தேகவளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது. நாம் உப்பில்லாப்பண்டத்தைத் தின்போமானுல் நம் தேகத்தில் சுகவீனமுண்டாகும். உப்புக்கு இன்னும் ஒரு முக்கிய தன்மையுண்டு. அழுகிப்போகும் வஸ்துவை அது அழுகாமல் தடுக்கும்.

கேள்விகள்

1. உப்பு எதிலிருந்து உண்டாகிறது?
2. உப்பு யாருக்குச் சொந்தம்?
3. உப்பு விளைவிக்கும் முறை என்ன?
4. உப்பினால் உண்டாகும் பிரயோஜனம் என்ன?

இலக்கணம்

ஒருமை	பன்மை
நான்	நாம், நாங்கள்
நீ	நீங்கள்
அவன், அவள்	அவர்கள்
மனிதன்	மனிதர், மனிதர்கள்
அது	அவை
செய்கிறேன்	செய்கிறோம்
செய்கிறாய்	செய்கிறீர்கள்
செய்கிறான், செய்கிறாள்	செய்கிறார்கள்
செய்கிறது	செய்கின்றன

23. கடவுளின் அன்பு

சீமான்	மூத்தவன்
நாடகம்	இளையவன்
உல்லாசமாய்	சூதாடினார்கள்
பசியின்கொடுமை	காலங்கழித்தார்கள்
வருந்தும்போது	தலைவிரிகோலம்
பூர்த்தியாய்	பாதரக்ஷைகள்
தெய்வத்துக்கு	விரோதமாகவும்
புத்திரன்	தகுதியற்றவன்

இயேசு பெருமான் இவ்வுலகத்திலிருந்த போது அநேக நல்ல கதைகளைச் சொன்னார்.

ஒவ்வொரு கதையும் ஏதோ ஒரு உண்மையைக் கற்பிக்கும். கடவுள் எப்படிப்பட்ட பாவியையும் நேசிக்கிறார் என்று காட்டுவதற்கு அவர் பின் வரும் கதையைக் கூறினார்.

ஒருஊரிலே ஒரு சீமான் இருந்தார். அவருக்கு இரண்டு ஆண்மக்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் தன் தந்தையாருக்குக் கீழ்ப்படிந்து அவர் இட்ட வேலையெல்லாம் தவறாமல் செய்துவந்தான். இளையவனோ அப்படி இல்லை. துஷ்டர்களோடு சிநேகம் செய்து தன் இஷ்டப்படி அலைந்து திரிந்தான். வீட்டில் ஒரு வேலையும் செய்யமாட்டான். தன் மனம்போலச் செலவு செய்யப் பணம் இல்லையே என்று வருந்தினான். ஒருநாள் அவன் தன் தகப்பனாரிடம் போய், "அப்பா, நான் இப்போது பெரியவனாகிவிட்டேன், எனக்குப் பல செலவுகள் இருக்கின்றன. ஆஸ்தியில் எனக்கு வரவேண்டிய பாகத்தைக் கொடுத்துவிடும்" என்றான். அவன் தந்தையார் மிகவும் துக்கப்பட்டார். ஆகிலும் அவன் கேட்டபடி அவன் பாகத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டார்.

ஆஸ்தியை வாங்கினவுடன் இளைய மகன் புறப்பட்டு, இரண்டுநாட் பிரயாணம் செய்து, ஒரு பெரிய பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தான். அவனுடைய சிநேகிதரும் அவன் கூடப் போனார்கள். வேறு பல புதுச் சிநேகிதரும் அவனிடம் போய்ச் சேர்ந்தார்கள். எல்லாருமாக விருந்து உண்டார்கள்; நாடகம், வேடிக்கைகள் முதலியன பார்த்தார்கள், சூதாடினார்கள், உல்லாசமாய்க் காலங் கழித்தார்கள். கொஞ்சக்காலத்தில் அவன் கையிலிருந்த பணம் முழுவதும்

செலவழிந்துபோய்விட்டது. அவன் சிநேகிதரும் ஒவ்வொருவராய் அவனை விட்டுப் போய்விட்டார்கள். பணமில்லாத ஏழைக்குக் கடன் கொடுக்கக்கூட ஒருவருமில்லை.

பசியின் கொடுமையினுல் அவன் கூலிவேலை செய்யப் புறப்பட்டான். ஒரு ஏழைக் குடியானவன் தன் பன்றிகளை மேய்க்கும்படி அவனைக் கூலிக்கு அமர்த்தினுன். மத்தியான வேளையில் அவன் பசியால் வருந்தும்போது பன்றிகள் தின்னும் தவிட்டைப் பார்த்து அவனுக்கு வாய் ஊறிற்று. அப்பொழுது அவன், "என் தந்தையார் வீட்டு வேலைக்காரர் ஒருநாளில் மூன்றுவேளை எவ்வளவு பூர்த்தியாய்ச் சாப்பிடுகிறுர்கள்? நானே இங்கே பட்டினியாய்ச் சாகிறேன். நான் என் தந்தையாரிடம் போய், "அப்பா, நான் தெய்வத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். இனிமேல் நீர் என்னை உம்முடைய புத்திரன் என்று சொல்ல நான் தகுதியற்றவன். என்னை உம்முடைய வீட்டில் ஒரு வேலைக்காரனுக வைத்துக்கொள்ளும் என்று சொல்லுவேன்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

அன்று சாயங்காலம் அவன் குடியானவனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். உடல் மெலிந்து, கந்தை உடுத்தி, காலில் செருப்பின்றி, தலைவிரிகோலமாய் நடந்துபோனுன். அவனைக்கண்ட ஒருவராகிலும் அவனை இன்னுனென்று சொல்லியிருக்க முடியாது. அவன் தகப்பனுரோ அவனைத் தூரத்திலேயே கண்டுகொண்டார். அவன்

வந்த கோலத்தை அவர் சற்றுகிலும் கவனிக்க வில்லே. ஓடிப்போய் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனுடைய இரு கன்னங்களிலும் முத்தமிட்டார். அவனே வீட்டுக்குள் கூட்டிக்கொண்டு போனார். வேலேக்காரரைக் கூப்பிட்டு அவனுக்குப் பட்டு வஸ்திரங்களேயும் கால்களுக்குப் பாதரக்ஷைகளேயும் கொண்டுவரும்படி கட்டளேயிட்டார்.

அவனுக்குக் கையிலே மோதிரம் போட்டார். அவனுக்காகப் பெரிய விருந்து செய்தார். வாத்தியக்காரர் வந்து வாத்தியம் வாசிக்கும்படி கட்டளேயிட்டார். அந்த வீடு கலியாண வீடுபோல் இருந்தது. வந்தவிருந்தினரைப் பார்த்து அவர், "என் மகன் செத்துப்போனுன் என்றிருந்தேன். ஆனுல் உயிரோடிருக்கிருன். காணுமற்போனுன் என்று ஏங்கினேன். இதோ வந்துவிட்டான்" என்று சொல்லி ஆனந்தங் கொண்டாடினுர்.

இலக்கணம்

அடியில் வார்த்தைகளில் ஒருமைக்குப் பன்மையையும், பன்மைக்கு ஒருமையையும் சொல்லுக:

பழமொழி, கேட்டிருப்பீர்கள், நாம், எரி, நிரப்புவார்கள், அது, கண்ணுக்கு, இருக்கிறது, சீமான், மூத்தவன்.

24. பொருந்தாத வார்த்தைகள்

பின்வரும் வார்த்தை வரிசைகளில் மற்ற வார்த்தைகளோடு பொருந்தாத வார்த்தை ஒன்று இருக்கிறது. அது எது என்று கண்டுபிடி. ஏன் பொருந்தவில்லை என்றும் சொல்.

1. அரிசி, சோளம், கேழ்வரகு, புளியங்காய், கம்பு.
2. செம்பு, பித்தளை, வெள்ளி, பொன், ஆடு.
3. கம்பளி, பொன், பட்டு, துணி.
4. மாடு, கன்று, குஞ்சு, குட்டி.
5. மோட்டார், வீடு, ஏரோபிலேன், கப்பல்.
6. பேனா, பென்சில், காகிதம், அரிசி, மை.
7. புஸ்தகம், நாற்காலி, மேசை, கட்டில்.
8. உளுந்து, கத்தரிக்காய், கடலை, துவரை.
9. கண், மூக்கு, சாவி, வாய், காது.
10. மழை, பனி, வெயில், காற்று, குடை.
11. கிச்சிலி, கீரை, வாழை, பலா, சீத்தா.
12. மாடு, குதிரை, பல்லி, ஆடு, கழுதை.

25. போலீஸ்காரன்

பாகம் 1.

குற்றமென்ன	சாலையிலே
ஓயாமல்	கண்டிப்பாய்
ஒன்றேடொன்று	கடமை
கருதியே	நியாயமான சட்டம்
பொதுஜன ஊழியர்	அனுகூலமாயிருக்கும்
நஷ்டமாவது	நிறைகளிலே

ஒருநாள் பாடசாலை முடிந்தவுடன் முருகேசன் வீட்டுக்கு வந்து தன் தகப்பனுரோடு பின்வருமாறு சம்பாஷித்தான்:—

முருகேசன்.— அப்பா, நான் இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது ஒரு துவிச் சக்கர வண்டியின்மேல் இரண்டு பையன்கள் போனுர்கள். ஒரு போலீஸ்காரன் அவர்கள் பேரை எழுதிக்கொண்டு கோர்ட்டுக்கு வர வேண்டுமென்று சொன்னுன். அவன் ஏன் அப்படிச் சொன்னுன்? அவர்கள் செய்த குற்றமென்ன?

தகப்பனுர்.— தம்பி, நல்ல கேள்வி கேட்டாய். சாலையிலே எத்தனை மோட்டார்வண்டி, மோட்டார்பஸ், குதிரைவண்டி, மாட்டுவண்டி போயின என்று கவனித்தாயா? வண்டிகள் ஓயாமல் போய்க் கொண்டிருக்கிற இடங்களில் போலீஸ்காரன் தன் வேலையைக் கண்டிப்பாய்ச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் வண்டிகள் ஒன்றேடொன்று மோதி, உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டாகும். இதற்காக வண்டிகளைப்பற்றி சர்க்கார்



சில சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளில் ஏதாவது உனக்குத் தெரியுமா?

முருகேசன்.— ஆம், வண்டிகள் எப்போதும் சாலையின் இடதுபக்கமாகவே ஓடவேண்டும். இரவில் கட்டாயம் வண்டிக்கு விளக்கு வைக்க வேண்டும். குதிரை வண்டியில் நான்கு பேருக்கு மேல் ஏறக்கூடாது. பஸ்வண்டியிலும் கணக்குக்கு மேல் ஏறக்கூடாது.

தகப்பனார்.— நீ சொன்னது சரியே. துவிச்சக்கரவண்டியில் இரண்டுபேர் போகக்கூடாது என்பது இன்னொரு சட்டம். இது நியாயமான சட்டமே. ஏனென்றால் வண்டிகள் அநேகம் போகிற இடங்களில், துவிச்சக்கரவண்டியில் இருக்கிற இரண்டாவது ஆள் இலேசாய் விழுந்து அடிபடக்கூடும். நம்முடைய நன்மையைக் கருதியே இச்சட்டங்களெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவற்றை நாம் கைக்கொள்வது நம்முடைய கடமையாகும். அது நமக்கு அனுகூலமாயிருக்கும்.

பாகம் 2.

முருகேசன். — அப்பா, போலீஸ்காரர் எத்தனையோபேர் இருக்கிறார்களே. அவர்கள் எல்லாரும் வண்டிகளைத்தானா கவனிக்கிறார்கள்? வேறு ஏதாவது செய்கிறார்களா?

தகப்பனார்.—தம்பி, இதுவும் நல்ல கேள்வியே. போலீஸ்காரரைப் பொதுஜன ஊழியர் என்று சொல்லவேண்டும். நமக்கு மற்ற ஜனங்களாலே



உயிர் நஷ்டமாவது, பொருள் நஷ்டமாவது உண்டாகாதபடி காப்பது அவர்கள் வேலை. வீதியிலே சண்டை, கலகம் ஏதாகிலும் உண்டானால் போலீஸ்காரர் இருதிறத்தாரையும் விலக்கி, நியாய சபையில் போய் அவர்கள் தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளும்படி ஒழுங்கு செய்வார்கள். இரவில் நாமெல்லாரும் படுத்துக்கொண்ட பிறகு, போலீஸ்காரர் வீதிகளில் துஷ்டர் களவுசெய்யாதபடி காவல் காக்கிறார்கள். களவு, கொலை முதலிய கொடிய காரியங்கள் நடக்கும்போது, போலீஸ்காரர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, நியாயஸ்தலத்துக்குக் கொண்டுவரும்படி பிரயாசப்படுவார்கள். சிறு பிள்ளைகள் யாராவது வழிதப்பி வீதியில் அலைந்து

கொண்டிருந்தால், அவர்கள் பெற்ருேரைக் கண்டு பிடித்து, அவர்களிடம் ஒப்புவிக்க முயற்சி செய் வார்கள். கடைகளில் கடைக்காரர் நமக்குக் கெட் டுப்போன பதார்த்தங்களை விற்காதபடி அவற் றைப் பார்வையிடுவார்கள். அளவிலேயாவது, நிறையிலேயாவது கடைக்காரர் மோசம் செய் யாதபடி, படிகளையும் நிறைகளையும் பார்வையிடு வார்கள்.

முருகேசன். — அப்பா, போலீஸ்காரர் இவ் வளவு நல்ல வேலை செய்கிறவர்களென்று எனக்கு இத்தனை நாளும் தெரியாது. எனக்கு எப்போ தும் அவர்களைப்பற்றிப் பயம் உண்டு. இனி மேல் அப்படிப் பயப்படமாட்டேன். நான் பெரியவனுகும்போது நானும் போலீஸ்கார ஞகட்டுமா?

தகப்பனுர்.— சரி சரி, தம்பி, அதைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம். இப்போது நீ விளை யாடப்போ.

கேள்விகள்

1. வண்டிகளைப்பற்றிச் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்கள் எவை?

2. நமக்கு உயிர்ச்சேதமாவது, பொருள் நஷ்டமா வது உண்டாகாதபடி போலீஸ்காரர் செய்யும் வேலைகள் எவை?

3. கடைக்காரர் நம்மை மோசம் செய்யாதபடி, போலீஸ்காரர் என்ன செய்கிருர்கள்?

இலக்கணம்

1. அவர்கள் செய்த
2. வண்டிகள் இடதுபக்கமாகவே
3. இது நியாயமான

மேல் ஒவ்வொரு தொடரின் அர்த்தமும் சரியாக முடியவில்லை.

1. அவர்கள் செய்த குற்றம் பெரியது.
2. வண்டிகள் இடது பக்கமாகவே ஓடவேண்டும்.
3. இது நியாயமான சட்டமே.

இப்பொழுது மேல் தொடர்களின் அர்த்தம் சரியாக முடிந்துவிட்டது.

26. நந்தவனம்

ஒரு நந்தவனத்தில் அநேக பூக்கள் இருந்தன. அவற்றில் சில வெள்ளை நிறம்; சில மஞ்சள் நிறம்; சில பச்சை நிறம்; சில இளஞ்சிவப்பு நிறம். சில பூக்கள் மரத்தில் பூத்திருந்தன, சில பூக்கள் படர் செடிகளில் பூத்திருந்தன, சில பூக்கள் சிறு செடிகளில் பூத்திருந்தன, சில பூக்கள் தடாகத்தில் மலர்ந்திருந்தன. அவைகளின் பேரை அடியிற்கண்ட அட்டவணையிலிருந்து கண்டு பிடிக்கக்கூடுமா என்று பார்.

மஞ்சள் சாமந்தி	மரமல்லிகை	மல்லிகை
மகிழம்பூ	ரோஜா	கேந்தி
சம்பங்கி	தாமரை	அல்லி
மனோரஞ்சிதம்	சூரியகாந்தி	முல்லை

கேள்விகள்

1. மரத்தில் மலர்ந்த வெள்ளைப் பூக்கள் இரண்டு ——— ———

2. சிறு செடியில் மலர்ந்த வெள்ளைப் பூக்கள் இரண்டு ——— ———

3. செடியில் பூத்த மஞ்சள் பூக்கள் மூன்று ———

4. சிறு செடியில் மலர்ந்த இளஞ்சிவப்பு நிறப்பூ ஒன்று ———

5. தடாகத்தில் மலர்ந்த இளஞ்சிவப்பு நிறப்பூ ஒன்று ———

6. படர் செடியில் பூத்த பச்சைநிறப்பூ ஒன்று ———

7. சிறு செடியில் பூத்த பச்சைநிறப்பூ ஒன்று ———

8. தடாகத்தில் மலர்ந்த வெள்ளைப்பூ ஒன்று ———

இலக்கணம்

கீழ்வரும் தொடர்களின் அர்த்தத்தைச் சரியாக முடிக்க இரண்டொரு வார்த்தைகளைச் சேர்த்துப் படி:—

1. சில பூக்கள் செடிகளில்
2. நந்தவனத்தில் அநேக
3. ஓதாமல் ஒருநாளும்
4. பள்ளிக்கூடம் போய்

அர்த்தம் முடிந்த தொடர்வாக்கியம் எனப்படும்.

‘சில பூக்கள் செடிகளில் பூக்கின்றன’ இது வாக்கியம். ‘சில பூக்கள் செடிகளில்’ இது வாக்கியம் அன்று.

27. தபால்

பாகம் 1.

தபால்காரன்	அனுப்பினீர்கள்	ஆபீசுக்கு
ரசீது	காகிதம்	முத்திரை

ராகவன்.— அப்பா, இதோ தபாற்காரன் வருகிறுன். நமக்கு ஒரு கடிதம் கொண்டுவருகிறுன். அப்பா, இது யாரிடமிருந்து வந்தது?

தகப்பனுர்.—இது அண்ணன் காகிதம். நான் வாசித்து முடிக்குமட்டும் பேசாதே.

ராகவன். — அப்பா, அண்ணன் காகிதம் தபாற்காரனுக்கு எப்படிக் கிடைத்தது? இவன் சென்னைப் பட்டினத்துக்குப் போயிருந்தாஞ?

தகப்பனுர்.— இல்லை, ராகவா, நேற்றுக்கூடத் தபால்காரன் எனக்கு டில்லியிலிருந்து வந்த கடிதம் ஒன்று கொண்டுவந்தான். அவன் டில்லிக்குப் போய் வந்தாஞ? இல்லை இல்லை. அண்ணன் இந்தக் காகிதத்தை எழுதி நமது தெருவின் கடைசியில் இருக்கிறதே, அந்த மாதிரியான ஒரு தபால்



பெட்டியில் போட்டிருப்பான். அங்கிருந்து ஒரு தபால்காரன் அதைத் தபால் ஆபீசுக்குக்கொண்டு போயிருப்பான். அங்கே அதை முத்திரை அடித்து, ஒரு பெரிய பையில் போட்டு, ரெயில் வண்டிக்கு அனுப்பியிருப்பார்கள். ரெயில்வண்டியில் அது நம்முடைய ஊருக்கு வந்திருக்கும். நம்முடைய தபால் ஆபீசிலே அதை மறுபடியும் முத்திரை குத்தித் தபால்காரனிடம் கொடுத்திருப்பார்கள்.

ராகவன்.— இப்படித்தானு எல்லாக் காகிதங்களும் வருகின்றன?

தகப்பனுர்.—ஆம், இப்படித்தான். எல்லாப் பெரிய ஊர்களிலும் ஒரு தபால் ஆபீசும், சில தபால் பெட்டிகளும் இருக்கும்.

ராகவன்:—அப்பா, இதற்கெல்லாம் பணம் யார் கொடுக்கிருர்கள்? நீங்கள் தபால்காரனுக்குப் பணம் கொடுக்க நான் பார்த்ததில்லேயே.

தகப்பனுர்.—கடிதங்களே அனுப்புகிறவர்கள் அதற்காகப் பணத்தை உடனே கட்டிவிடுகிருர்கள். நான் அண்ணனுக்குக் கடிதம் எழுதும் போது உடனே கூலியைக் கட்டிவிடுகிறேன். இதோ பார், அண்ணனுடைய கடிதம். இதிலே ஒன்றறையணு முத்திரை ஒட்டியிருக்கிறது. இதை அண்ணன் தபால் ஆபீசிலே ஒன்றறையணுக் கொடுத்து வாங்கியிருப்பான். நீண்டகடிதம் எழுதி அனுப்புகையில்கூட ஒரு காலணு முத்திரையை ஒட்டுவான். கார்டு போடும்போது அவனுக்கு அறையணுத்தான் செலவு.

பாகம் 2.

ராகவன்.— அப்பா, போனவாரம் அண்ணன் அம்மாவுக்குப் புடைவை அனுப்பியிருந்தானே. அதிலே நல்ல அழகான முத்திரைகள் ஒட்டியிருந்தான். அவற்றிற்கு அதிகப் பணம் கொடுத்திருப்பானு?

தகப்பனர்.— ஆம், ராகவா, அது பட்டுப் புடைவை. அதன் விலை நாற்பது ரூபாய், அதைப்



பத்திரமாய்க் கொண்டுவந்து சேர்க்கும்படியாக அதிக பணம் கொடுக்கவேண்டும். அண்ணன் அதற்குப் பத்து அணு முத்திரை ஒட்டியிருந்தான்.

ராகவன்.—அப்பா, நீங்கள் அண்ணனுக்குப் பணம் அனுப்பினீர்களே. அதை எப்படி அனுப்பினீர்கள்? முத்திரை ஒட்டியா அனுப்பினீர்கள்?

தகப்பனர்.—இல்லை, ராகவா, அதற்குப் பணம் நான் தபால் ஆபீசிலே நேரில் போய்க் கட்டினேன். ஐம்பது ரூபாய் அனுப்புவதற்கு அரை ரூபாய் கட்டினேன்.

ராகவன்.—அரைரூபாய் என்ருல் எட்டு அணு அல்லவா, அப்பா? உங்கள் பணம் அண்ணனுக்குக் கிடைத்தது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?

தகப்பனர்.—பணம் போய்ச் சேர்ந்தது என்று எனக்கு ஒரு ரசீது வந்தது. இதோ பார், அண்ணனிடமிருந்து வந்த ரசீது. அதில் அண்ணன் கையெழுத்து வைத்திருக்கிருன்.

ராகவன்.—ஆம், அப்பா, இது அண்ணன் எழுத்துத்தான். அப்பா, நான் இன்றைக்கு அண்ணனுக்குக் கடிதம் எழுதவேண்டும். எனக்குச் சொல்லித் தருவீர்களா?

தகப்பனர்.—ஆகட்டும், ராகவா, இன்று மத்தியானம் எழுதலாம். இப்போது எனக்கு வேலையிருக்கிறது. நீ போய் விளையாடு.

கேள்விகள்

1. உன் சிநேகிதன் உனக்கு எழுதின கடிதம் உன் கையில் கிடைக்குமுன் அது செய்த பிரயாணத்தை விவரமாகச் சொல்.

2. தபால்மூலமாய்ப் பணம் அனுப்பும் முறை என்ன?

3. தபால் மூலமாய்ச் சாமான் அனுப்பும் முறை என்ன?

இலக்கணம்

கீழ்வரும் தொடர்களில் வாக்கியங்களைக் காட்டு:

1. அப்பா, இதோ
2. அவன் சென்னைப்பட்டினம் போயிருந்தான்.
3. எனக்கு டில்லியிலிருந்து கடிதம்
4. இதில் முத்திரை ஒட்டியிருக்கிறது.
5. அதில் அண்ணன் கையெழுத்து வைத்திருக்கிறான்.
6. இன்று மத்தியானம்

28. கடிதம் எழுதுதல்

ஆரம்பிக்க	மைப்பெட்டி
வாடாமல்லிகை	சமாசாரம்
மொட்டு	பவழக்கோத்து
பதில் எழுது	சீக்கிரம்

மத்தியானம் போஜனம் முடிந்தவுடன், ராகவன் பேனா மைப்பெட்டி, கடுதாசி முதலியவைகளை எடுத்துக்கொண்டு தகப்பனாரிடம் போனான். “அப்பா, அண்ணனுக்குக் கடிதம் எழுதவேண்டும். எப்படி எழுதவேண்டும் என்று சொல்லித் தாருங்கள்” என்றான். அவர் அவனுக்கு மேசையிலே கடுதாசி வைக்க இடங்கொடுத்து, எப்படி முடிக்கவேண்டுமென்றும் சொல்லிக்கொடுத்தார். ராகவன் தன் மனத்தில் வந்தபடி சமாசாரம் எழுதினான். அவன் எழுதின கடிதம்:

நெ. 10, ஒப்பனைக்கார வீதி,
கோயம்புத்தூர்,
24–20–'35.

என் பிரியமான அண்ணன் அறிவது:

நீ அம்மாவுக்கு அனுப்பின புடைவை அழகாய் இருக்கிறது. நீ எழுதின கடிதம் எப்படி இங்கே வந்து சேர்ந்தது என்று அப்பா எனக்குச் சொன்னார். எனக்குக் கடிதம் எழுதவும் சொல்லிக் கொடுத்தார்.

போன மாதம் எங்கள் பள்ளிக்கூடத்திலே வெகுமதி கொடுத்தார்கள். எனக்கு ஒரு கதைப் புஸ்தகம் கிடைத்தது. எனக்கு மோட்டார்வண்டி இஷ்டம். ஏனோ எனக்கு மோட்டார்வண்டி கொடுக்கவில்லை. பட்டினத்திலே மோட்டார் வண்டி கிடைக்குமா?

தோட்டத்திலே நீ வைத்த வாடாமல்லிகையும் பவழக்கொத்து மல்லிகையும் பூத்திருக்கின்றன. சாமந்தி மொட்டு விட்டிருக்கிறது.

நம்முடைய நாய் மூன்று குட்டி போட்டிருக்கிறது. இரண்டு கறுப்பு, ஒன்று வெள்ளை. இன்னும் கண் திறக்கவில்லை.

நீ எப்போது வருவாய்? சீக்கிரம் வா. உன்னைப் பார்க்க ஆசையாயிருக்கிறது.

இப்படிக்கு
உன் அன்புள்ள தம்பி,
ராகவன்

அப்பியாசம். தீபாவளியை எப்படிக் கொண்டாடினீர்கள் என்பதை விவரித்து உன் மாமாவுக்குக் கடிதம் எழுது.

இலக்கணம்

கீழே ஒவ்வொரு வரிசையிலும் உள்ள வார்த்தைகளை இடம் மாற்றி வாக்கியங்கள் உண்டாக்கு:—

1. போட்டிருக்கிறது, மூன்று, நம்முடைய, குட்டி, நாய்,
2. மூன்றுவது நான் படிக்கிறேன், வகுப்பில்
3. சீக்கிரம், எழுது, பதில்
4. என் புத்தகத்திலே கதைகளும் இருக்கின்றன, நல்ல, படங்களும்.

29. விலாசம் எழுதுதல்

விலாசம்	காகித உறை
புன்னகை	எழுத்துப் பிழை
மெச்சிக்கொண்டான்	தெளிவாய்

கடிதம் எழுதி முடிந்தவுடன் ராகவன், "அப்பா, இந்தக் கடிதத்தை உடனே தபால் பெட்டியில் போடவேண்டும். எனக்கு ஒரு காகித உறையும், ஒன்றறையணு முத்திரையும் கொடுங்கள்" என்ருன். தன் கடிதத்தை உறைக்குள்ளே வைத்து முத்திரை ஒட்டின பிறகு, "அப்பா, இதில் அண்ணன் பேரைமாத்திரம் எழுதினுல் போதுமா?" என்று கேட்டான். தகப்பனுர் புன்னகை செய்து கொண்டு, "ராகவா, மேல்விலாசங்கூட நீயே எழுதப்போகிருயா! சரி, எழுது, எழுது. ஆனுல் தெளிவாய் எழுத்துப் பிழையில்லாமல் எழுது. முதலாவது, அண்ணன் பேரை எழுது. அடுத்த வரியில் அண்ணன் வீட்டு நம்பரையும், அவன் இருக்கிற தெருவின் பேரையும் எழுது. அதற்குக்

கீழே அவர்கள் இருக்கிற தபால் ஆபீசின் பேர் போடு. அடியிலே சென்னைப்பட்டினம் என்று போடு" என்றார். அப்படியே ராகவன் பின்வருமாறு எழுதினான்.

ம-ள-ள-ஸ்ரீ
தி. சோமசுந்தரம் அவர்கள்
81 தம்புசெட்டித் தெரு
ஜியார்ஜ் டவுன்
சென்னைபட்டினம்

அவன் தகப்பனார் அதைப் பார்த்து, "சரியாய் எழுதியிருக்கிறாய்" என்று அவனை மெச்சிக்கொண்டார். ராகவன் அதை ஓடிக் கொண்டுபோய்த் தபால் பெட்டியில் போட்டான்.

அப்பியாசம். உன் தகப்பனாருடைய மேல் விலாசம் எழுது.

30. உண்மையுள்ள இடைப்பையன்

அடிப்பாதை	பயிற்றுவித்தார்
சமானமாகும்	வழிதப்பிப்போன
தூண்டிவிட்டீர்	அலைகிறேன்
உத்தமன்	நம்பமாட்டாயா
நேர்மை	மேலிடுகிறது

ஒரு ஊரிலே ஓர் இடைப்பையன் இருந்தான். அவன் பெயர் கோவிந்தன். ஒருநாள் அவன்

காட்டிலே மந்தையை மேய்த்துக்கொண்டிருக்கையில், வேட்டையாடப் போய் வழிதப்பிப் போன ஒரு ராஜா அவனிடம் வந்தார். ராஜா அவனைப் பார்த்து, "தம்பி, இங்கிருந்து கிராமத்துக்கு எவ்வளவு தூரம்?" என்று கேட்டார். "ஐயா, இங்கிருந்து கிராமத்துக்கு ஏறக்குறைய ஐந்து மைல் இருக்கும். ஆனால் அங்கே போகச் சாலை கிடையாது. ஒற்றை அடிப்பாதைதான் உண்டு" என்று கோவிந்தன் பதிலுரைத்தான்.

ராஜா பின்னும் அவனைப் பார்த்து, "பொழுது போயிற்று. வழிதப்பி அலைகிறேன். பசியாயிருக்கிறேன். போஜனம் எங்கே வாங்கலாமென்று நீ என்னோடுகூட வந்து காட்டு" என்றார். அதற்குக் கோவிந்தன், "ஐயா, நான் ஆடுகளை விட்டு வரமுடியாது. நான் போய்விட்டால் ஆடுகள் காட்டில் அலைந்து காணாமற்போகும்"

என்ருன். ராஜா அவனை நோக்கி, "ஆடுகள் உன்னுடையனவல்லவே, இரண்டொன்று காணு மற் போனுலென்ன? நீ ஒரு வருஷத்தில் சம்பாதிக்கக்கூடிய பணத்தை இந்த ஒரே நாளில் நான் உனக்குத் தருவேனே" என்ருர். கோவிந்தன், "ஐயா, தம்முடைய ஆடுகளைக் காக் கும்படி என் எஜமான் எனக்குச் சம்பளம் கொடுத்து வேலையில் அமர்த்தியிருக்கிருர். ஆகை யால் நான் என் இஷ்டப்படி செய்யமுடியாது. என் வேலையை விட்டுவிட்டுப் போவது திருடு வதற்குச் சமானமாகும்" என்ருன்.

ராஜா பின்னும் அவனைப் பார்த்து, "அப்படி யானுல் நான் உன் ஆடுகளைப் பார்த்துக்கொள்ளு கிறேன். நீ போய் எனக்கு உணவு வாங்கிக் கொண்டு வா" என்ருர். கோவிந்தன், "ஐயா, ஆடுகள் உம்மை அறியாதே" என்ருன்.

"ஏனடா, சின்னப்பயலே, என்னை நம்பமாட் டாயா! என்னைப் பார்த்தால் கள்ளனைப்போ லிருக்கிறதா?" என்று ராஜா கேட்டார். அதற்குக் கோவிந்தன், "ஐயா, இவ்வளவு நேரம் என் எஜமானுக்கு மோசம் பண்ணும்படி என்னைத் தூண்டிவிட்டீர். நீர் என்னை மோசஞ் செய்ய மாட்டீர் என்று எப்படி அறிவேன்!" என்ருன்.

ராஜா, "தம்பி, நீ உத்தமன் என்று அறிந்தேன். ஆனுல் பசி மேலிடுகிறது. நான் எங்கேயாவது போய்ப் போஜனம் வாங்கவேண்டும். பாதையை மாத்திரம் எனக்குக் காட்டு" என்ருன். கோவிந்தன் தன் சிறு மூட்டையை அவிழ்த்து, தான் கொண்டு வந்திருந்த தோசை, பழம் முதலியவற்றை அவ ருக்குக் கொடுத்தான். ராஜா வாங்கித் தின்ருர்.

இதற்குள் ராஜாவுடைய வேலைக்காரர் வந்து விட்டார்கள். அப்போதுதான் தன்னோடு பேசிக் கொண்டிருந்தவர் ராஜா என்று கோவிந்தன் அறிந்துகொண்டான்.

ராஜா கோவிந்தனுடைய நேர்மையை மிகவும் புகழ்ந்துகொண்டார். அவனைத் தன் சொந்தச் செலவில் பாடசாலைக்கு அனுப்பிக் கல்வி பயிற்றுவித்தார். கோவிந்தன் கல்வி கற்றுப் பெரிய பதவியை அடைந்தான்.

கேள்விகள்

1. இடைப்பையன் உண்மையுள்ளவன் என்பதற்கு உதாரணம் கொடு.

2. ராஜா பெருந்தன்மையுடையவர் என்பதற்கு உதாரணம் கொடு.

இலக்கணம்

முதல் பாராவில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் தனித்தனியே எடுத்துக் காட்டு.

ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஒவ்வொரு புள்ளி காணப்படுகிறது. இதைக் கவனிக்கவும். இந்தப் புள்ளி முற்றுப்புள்ளி எனப்படும்.

வாக்கியம் எழுதி முடிந்ததும் முற்றுப்புள்ளி போட வேண்டும்.

31. தொழிலாளர்

பாகம் 1.

அஸ்திபாரம்	குழைப்பார்கள்
கொல்லத்துக்காரர்	மேல்பார்க்க
அடுக்குவார்கள்	விளைவிக்கின்றார்கள்
சிற்றாட்கள்	உணவுப்பொருள்கள்

வீடு கட்டுவதைப் பார்த்திருக்கிறாயா? அதில் எத்தனை விதமான வேலையாட்கள் வேலை செய்கிறார்கள் என்று கவனித்தாயா? நிலத்தைத் தோண்டி அஸ்திபாரம் போடுவார்கள், மண் குழைப்பார்கள். மண் வண்டிக்காரர் மண்ணும், செங்கல் வண்டிக்காரர்

செங்கல்லும், சுண்ணம்பு வண்டிக்காரர் சுண்ணம்பும் கொண்டுவந்து கொட்டுவார்கள். கொல்லத்துக்காரர் செங்கல்வைத்துச் சுவர் கட்டுவார்கள், கூரையில் ஓடு அடுக்குவார்கள். தச்சர் கதவு, ஜன்னல், உத்தரம், தூண் முதலிய மரவேலையைச் செய்வார்கள். வர்ணம் பூசுகிறவர்கள் வந்து வர்ணம் பூசுவார்கள். கூலிக்காரர் வெள்ளையடிப்பார்கள். வேலையையெல்லாம் மேல்பார்க்க ஒரு மேஸ்திரி இருப்பான். மண், செங்கல் முதலியவற்றைச் சுமக்க ஸ்திரீகளும் சிற்றாட்களும் இருப்பார்கள். இத்தனை விதமான தொழிலாளரும் வேலை செய்யாவிட்டால் நமக்குக் குடியிருக்க நல்ல வீடு கட்டமுடியாது.

பாகம் 2.

நம்முடைய உணவு எங்கிருந்து வருகிறதென்று உனக்குத் தெரியுமா? நாம் உண்ணும் அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களைச் சமுசாரிகள் பயிர் செய்கிறார்கள். கடலை முதலிய பயறு வகைகளைக் குடியானவர்கள் விளைவிக்கின்றார்கள். சமையலுக்குவேண்டிய காய் கறிகளையும், பழவர்க்கங்களையும் தோட்டக்காரர் உற்பத்தி செய்கிறார்கள். வியாபாரிகள் இவற்றை அவர்களிடத்தில் வாங்கிக் கடைகளில் விற்பார்கள். இடையர் ஆடுகளை மேய்த்து விற்பவர்களுக்கு விலைக்குக் கொடுப்பார்கள். செம்படவர் மீன் பிடித்து மீன் வியாபாரிகளுக்கு விற்பார்கள். மாடு வைத்திருப்பவர்கள் பால், தயிர், மோர், நெய் முதலியவற்றை ஊருக்குள் கொண்டுபோய் விற்பார்கள். முட்டை வியாபாரி கிராமங்களில் முட்டைகளை வாங்கிக்கொண்டுபோய் நகரத்திலே விற்பான்.

ஆகவே, நமது உணவுப்பொருள்களை நாம் கடைகளில் வாங்குமுன்னே, அநேக ஜனங்கள் அதற்காக வேலை செய்திருக்கிறார்கள் என்று காண்கிறோம்.

உணவுப்பொருட்கள் போக இன்னமும் நமக்கு வேண்டிய மற்றச் சாமான்களும் உண்டு. நாம் உடுத்தும் பருத்தி, பட்டு, கம்பளி முதலிய உடைகளைச் செய்கிறவர்கள் பலர். களிமண், பித்தளை, செம்பு முதலியவற்றால் நம்முடைய சமையல் பாத்திரங்களையும், போஜன பானபாத்திரங்களையும் செய்கிறவர்கள் பலர். கூடை, பாய் முதலியவைகளை முடைகிறவர்கள் பலர். கேணிகளில் வேலை செய்கிறவர்கள் பலர்.



மேலும் இப்பொருள்களை அவை உண்டாகும் இடத்திலிருந்து விற்கிற இடத்திற்குக் கொண்டு போவதில் இன்னும் அநேக ஜனங்கள் வேலை செய்கிறார்கள். எப்படியென்றால், பற்பல வித மான வியாபார வண்டிகள் சரக்குகளை ஏற்றிக் கொண்டுபோகின்றன. அவைகள் போய் வரும் சாலைகளை உண்டாக்கவும், பழுதுபார்க்கவும் நூற்றுக்கணக்கான கூலியாட்கள் வேலைசெய்கிறார்கள். நமது உணவுப்பொருள்களில் அநேகம் இருப்புப் பாதை வழியாய் வருகின்றன. இவைகளிலெல்லாம் வேலை செய்கிற ஜனங்களைக் கணக்கிட முடியாது.

பாகம் 3.

மேற்கூறிய தொழில்கள் போக இன்னும் பல வேலைகளும் உத்தியோகங்களும் இருக்கின்றன. கல்வி கற்ற அநேகர் உபாத்திமாராயிருக்கிறார்கள். சிலர் வைத்தியவேலை செய்கிறார்கள். சிலர் வக்கீல் வேலையும், அநேகர் குமாஸ்தா வேலை

யும் செய்கிறார்கள். இன்னும் அநேகர் போலீஸ் வேலையும் அநேகர் தபால்வேலையும் செய்கிறார் கள். பாலங்கள், சாலைகள், வாய்க்கால்கள், பொதுக்கட்டடங்கள் முதலியவற்றைக் கட்டுகிற சிற்பர் நூலோர்களும், அவர்களடியில் வேலை செய்யும் மேஸ்திரிகளும் உண்டு. இந்தப் பாடத்தில் சொல்லப்படாத வேலைகள் இன்னும் அநேகம் இருக்கின்றன. அவற்றில் உனக்கு ஞாபகம் வருகிறவைகளை எழுது.

கேள்விகள்

1. நாம் குடியிருக்கும் வீடுகளைக் கட்டினவர்கள் யார்?

2. நாம் புசிக்கும் போஜன பதார்த்தங்கள் கடைக்கு வருமுன் அவற்றிற்காக வேலை செய்தவர்கள் யார்?

3. எந்தெந்தத் தொழில் செய்பவர்களை நாம் பிரயோஜன மற்றவர்களென்று சொல்லலாம்?

இலக்கணம்

கீழே உள்ள தொடர்களில் எதற்கு முற்றுப்புள்ளி வேண்டும், எதற்குக் கூடாது என்று பார்த்துச் சொல்லு:

1. வீடு கட்டுவதை
2. தச்சன் மரவேலை செய்வான்
3. தானியங்களைச் சமுசாரிகள் பயிர் செய்கிறார்கள்
4. வியாபாரிகள் இவற்றை
5. கல்வி கற்ற அநேகர்
6, கேணிகளில் வேலை செய்கிறவர்கள் பலர்

ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஊக்கம் அது கைவிடேல்.
5. ஏற்பது இகழ்ச்சி.
6. ஐயம் இட்டு உண்.
7. ஓதுவது ஒழியேல்.
8. ஔவியம் பேசேல்.
9. கண்டு ஒன்று சொல்லேல்.
10. தந்தை தாய்ப் பேண்.
11. நன்றி மறவேல்.
12. வஞ்சகம் பேசேல்.
13. அழகு அலாதன செயேல்.
14. இளமையிற் கல்.
15. கடிவது மற.
16. குணம் அது கைவிடேல்.
17. கூடிப் பிரியேல்.
18. கெடுப்பது ஒழி.
19. கொள்ளை விரும்பேல்.
20. கோது ஆட்டு ஒழி.
21. சித்திரம் பேசேல்.
22. சுளிக்கச் சொல்லேல்.
23. செய்வன திருந்தச் செய்.
24. சோம்பித் திரியேல்.
25. தீவினை அகற்று.
26. தெய்வம் இகழேல்.
27. நோய்க்கு இடங் கொடேல்.
28. வல்லமை பேசேல்.
29. வெட்டெனப் பேசேல்.
30. வேண்டி வினைசெயேல்.

கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்அறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
6. ஏவா மக்கள் மூவா மருந்து.
7. ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
8. கிட்டாதாயின் வெட்டென மற.
9. கீழோர் ஆயினும் தாழ உரை.
10. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
11. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
12. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.
13. சூதும் வாதும் வேதனை செய்யும்.
14. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
15. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
16. தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
17. தீராக் கோபம் போராய் முடியும்.
18. தேடாது அழிக்கின் பாடா முடியும்.
19. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
20. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
21. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.
22. வீரன் கேண்மை கூர் அம்பாகும்.
23. உரவோர் என்கை இரவா திருத்தல்.
24. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
25. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை.

அரும்பதவுரை

ஆத்திசூடி

1. அறம் = தருமம்
2. ஆறுவது = தணியத்தக்கது
   சினம் = கோபம்
3. இயல்வது = (உன்னால் கொடுக்க) இயன்றதை
   கரவேல் = மறைக்காதே
4. ஊக்கம் = முயற்சி
5. ஏற்பது = பிச்சையெடுப்பது
   இகழ்ச்சி = இழிவு
6. ஐயம் = பிச்சை
7. ஓதுவது = கற்பது
   ஒழியேல் = விட்டுவிடாதே
8. ஔவியம் = பொறாமையான வார்த்தைகள்
9. கண்டு ஒன்று = ஒன்றைப் பார்த்து அது அல்லாத வேறொன்றை
10. பேண் = காப்பாற்று
13. அழகு = சிறப்பு
    அ(ல்)லாதன = அல்லாதவற்றை
14. இளமை = இளம் பிராயம்
15. கடிவது = கோபமான வார்த்தையை
20. கோது = குற்றமுள்ள
    ஆட்டு = விளையாட்டை
21. சித்திரம் = மெய்போன்ற பொய்
22. சுளிக்க = கோபம் உண்டாக
23. செய்வன = நீ செய்யும் வேலைகளை
24. சோம்பி = சோம்பலாக
25. இகழேல் = தூஷியாதே
28. வல்லமை = உன் சாமர்த்தியத்தை
29. வெட்டென = கடுமையாக
30. வேண்டி = வேண்டுமென்று

கொன்றைவேந்தன்

2. சாலவும் = மிகவும்
3. ஈயார் = கொடாதவர்
தேட்டை = சம்பாத்தியத்தை
தீயார் = பொல்லாதவர்கள்
கொள்வர் = அபகரிப்பார்கள்
4. ஊருடன் = ஊராரோடு
வேருடன் = தன் வம்சத்துடன்
5. எண்ணும் = கணக்கும்
எழுத்தும் = இலக்கணமும்
6. ஏவா = தூண்டுதல் வேண்டாத
மூவா = கெடாத
மருந்து = அமிர்தம்
7. ஔவியம் = பொறாமையான வார்த்தைகள்
ஆக்கம் = செல்வம்
8. கிட்டாதாயின் = கிடைக்காவிட்டால்
வெட்டென = கடுமையாய்
9. தாழ = வணக்கமாக
10. சுற்றம் = உறவு
11. கேட்டில் = துன்பத்தில்
உறுதி = தைரியமாயிருத்தல்
12. கோட்செவி = கோள் கேட்பவனுடைய காதிலே
குறளை = கோள்
13. சூதும் = சூதாடுதலும்
வாதும் = வாதாடுவதும்

14. சோம்பர் = சோம்பேறிகள்
தேம்பி = வருந்தி
15. மிக்க = மேற்பட்ட
மந்திரம் = ஆலோசனை
16. துறந்தால் = தள்ளினால்
வாசகம் = அதைவிட நல்ல வசனம்
17. போர் ஆ = சண்டையாக
18. தேடாது = சம்பாதியாமல்
19. நுண்ணிய = சிறிய
கருமம் = வேலை
துணி = தீர்மானி
20. மின்னுக்கு = மின்னலுக்கு
21. மூத்தோர் = அறிவிலே முதிர்ந்தவர்
அமிர்தம் = அமிர்தம்போல் அருமையானது
22. வீரன் = வீரனுடைய
கேண்மை = சிநேகம்
23. உரவோர் = அறிவுடையவர்
என்கை = என்று சொல்லப்படுதல்
24. ஆக்கம் = செல்வம்
25. வெள்ளை — களங்கமற்றவன்

TB 031 (3) N47
தமிழ்நாடு அரசு கன்னிமாரா நூலகம் சென்னை-600 008.
13706

10·7·97
1047

C. L. S. தமிழ் வாசகங்கள்

தமிழ் வாசகங்கள் 1—5 வகுப்புகளுக்கு

By S. G. DANIEL

சித்திர வாசகங்கள் 1—8 வகுப்புகளுக்கும்

I—III பாரங்களுக்கும்

By P. N. APPUSAWMY &

J. P. MANIKKAM

அமிர்த வாசகங்கள் 1—5 வகுப்புகளுக்கு

By L. A. PITHAVADIAN

தமிழ்க் களஞ்சியம் I—III பாரங்களுக்கு

By K. P. SANTOSH

N B. முதல் இரண்டு வாசக வரிசைகள் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலும் சக்கன்டரி பாடசாலையிலும் உபயோகிக்க அரசாங்கத்தாருடைய அனுமதி பெற்றவை.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Post Box 501, Park Town, Madras
and at Bangalore Mysore Bezwada Colombo